பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 05, வெள்ளிக்கிழமை 21.07.2017 | கதிர் 257


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

# அரசமைப்பு உருவாக்கம் நாட்டைப் பிரிப்பதற்கு அல்ல; இனப்பிரச்சினையைத் தீர்க்க!



## ஆஸி. வெளிவிவகார அமைச்சரிடம் சம்பந்தன் நேற்று நேரில் விளக்கம்

கொழும்பு, ஜூலை 21

"புதிய அரசமைப்பு உருவாக்கம் நாட்டைப் பிரிப்பதற்கு அல்ல.

மாறாக, இந்தநாட்டில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு எல்லோரும் இணைந்து தீர்வு காண்பதற்காகவே."

- இவ்வாறு இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரிடம் விளக்கமாகத் தெரிவித்தார் எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

பக்கம் 03 »

### கூழாமுறிப்பில் குடியேற்றத்துக்காகக் காடழிப்பு!

## நீரின்றி அல்லற்படும் மக்களின் கிணறுகளை படைகள் ஆக்கிரமித்துள்ளமை பெரும்பாவம்

### வறட்சிப் பாதிப்புக் குறித்து அமைச்சரிடம் முதல்வர் முறையீடு

யாழ்ப்பாணம், ஜூலை 21

"வறட்சியால் நீரின்றி மக்கள் அல்லல்படுகின்றார்கள். ஆனால் அப்பகுதி மக்களின் கிணறுகளைப்படையினர் ஆக்கிரமித்துத் தாங்கள் பயன்படுத்தி வருகின்றார்கள். இது சட்ட ரீதியாகக் குற்றமாக அமையாவிட்டாலும் பெரும் பாவமாகும்.

"எங்கள் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினரைக்குடியேற்றுவதற்காக கூழாமுறிப்புப் போன்ற

பக்கம் 03 »

## சமஷ்டி அரசமைப்பு சட்டத்தை முடிந்தால் நிறைவேற்றுங்கள்!

### விமல் வீரவன்ஸ அரசுக்கு சவால்



கொழும்பு, ஜூலை 21

முடிந்தால்அரசாங்கம்சமஷ்டி அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிக் காட்டட்டும் பார்க்கலாம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ சவால் விடுத்துள்ளார்.

பக்கம் 18 »

## சம்பந்தன் - விக்கி சந்திப்புக்கு இன்னும் திகதி முடிவாகவில்லை





கொழும்பு, ஜூலை 21

வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து கலந்து பேசித் தீர்ப்பதற்காக கூட்டமைப்பின் தலைவர்

பக்கம் 18 »

## டெங்கை ஒழிக்க ஆஸி. உதவி; அந்நாட்டு அமைச்சர் உறுதி

### இயற்கை பக்டீரியா அறிமுகமாகும்



கொழும்பு, ஜூலை 21

"இலங்கையில் டெங்கு நோயைஒழிப்பதற்கு ஆஸ்திரேலியா அரசு உதவும்" என்று ஆஸ்திரேலியா வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் தெரிவித்துள்

பக்கம் 18 »

## ஞாயிறு ஆடி அமாவாசையன்று கீரிமலையில் சிவலிங்க வழிபாடு



ஆடிஅமாவாசை விரத தினமான நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கீரிமலை முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு முன்பாக உள்ள குழந்தை வேல் சுவாமிகள் ஆலயக் கடற்கரையில் 15 அடி உயர

பக்கம் 18 »

## நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பலம் இரண்டு வாரங்களில் இழக்குமாம் அரசு!

### அடித்துக் கூறுகின்றது கூட்டு எதிரணி

நாடாளுமன்றத்தில் நல்லாட்சி அரசின் மூன்றில் இரண்டு பங்கு பலம் இன்னும் இருவாரங்களில் இழக்கப்படும் என கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

கூட்டு எதிரணி எம்.பியான டலஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்குள் இருக்கும் நெருக்கடி நிலைமையை மறைக்க வெவ்வேறு விதமான பொய்ப் பிரசாரங்களை அரசு முன்னெடுத்து வருவதாகவும்

பக்கம் 18 »

## இடைக்கால அறிக்கை நகலை இறுதி செய்தது நடவடிக்கைக் குழு

கொழும்பு, ஜூலை 21

நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றக் கட்டடத்தில்பிரதமர்ரணில்விக்கிரமசிங்கதலைமையில்கூடிய புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல்குழு,தனதுஇடைக்கால அறிக்கையின் நகல் வடி

பக்கம் 18 »

## இந்தியாவின் ஜனாதிபதியாக ராம்நாத் கோவிந்த் தெரிவு



டில்லி, ஜூலை 21

இந்தியாவின் 14ஆவதுகுடியரசுத் தலைவராக – ஜனாதிபதியாக – பாரதீய ஜனதா கட்சியின் வேட்பாளர் ராம்

பக்கம் 18 »

## மாகாண சபையில் விசேட அமர்வு இன்று

வடக்கு மாகாண சபையின்விசேடஅமர்வு இன்று நடை பெறுகின்றது.

சபையின் கடந்த மூன்றரை ஆண்டுகாலப்பணிகள் குறித்தும், அதையொட்டிய சாதக பாதகங்கள் குறித்தும் இன்று ஆராயப்பட விருக்கின்றது.

பக்கம் 18 »

### வித்தியா கொலை வழக்கில் முக்கிய சாட்சியம்

## யாழ். மேல் நீதிமன்றில் நேற்று விசேட அதிரடிப்படை பாதுகாப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வித்தியா படுகொலை வழக்கு விசாரணைகள் நேற்று யாழ்.மேல் நீதிமன்றத்தில் 'ட்ரயல்அட்பார்' தீர்ப்பாயம் முன்னிலையில் இடம் பெற்றபோது குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பியகமகே சிசிர சிசேரா சாட்சியமளித்தார்.

இந்த வழக்கில் அவர் முக்கிய சாட்சி என்பதால் நேற்று அவர் சாட்சியம்

பக்கம் 18 »

### அளப்பு அருணாசலம்




## காணாமற்போனோர் அலுவலகம்: வர்த்தமானியில் ஜனாதிபதி ஒப்பம்

### நேரடியாக அவரின் கீழ் அந்த விவகாரம்



காணாமற்போனோர் அலுவலகம் தொடர்பான சட்ட மூலத்தை ஒட்டிய வர்த்தமானி அறிவித்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்பமிட்டார்.

தான் அந்த வர்த்தமானி

பக்கம் 18 »

# ஊழல் மோசடிகளை விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு அமெ. உதவி

## இது தொடர்பிலான உடன்படிக்கைக்கான பத்திரம் ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டது



இலங்கையின் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவை வலுப்படுத்துவதற்கு அமெரிக்க இரா ஜாங்கத் திணைக்களம் நிதியுதவி வழங்கவுள்ளது.

ஆணைக்குழுவுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வழங்க முன்வந்துள்ள, 2 லட்சத்து 35 ஆயிரம் டொலர் நிதியை ஏற்றுக் கொள்வதற்கு, அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இதற்கான அனுமதி கோரும் பத்திரத்தை ஜனா திபதி மைத்திரிபால சிறி சேன முன்வைத்திருந்தார்.

இந்த நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான பிரிவுடன் இலங்கை அரசு புரிந்துணர்வு உடன்பாட்டிசு கையெழுத்திடுவதற்கு அமைச்சரவை யின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக் குழுவில் பெருமளவு முறைப்பாடுகள் இருக்கும் நிலையில், அதனி டம் போதிய வளங்களும், ஆள ணியும் இல்லாத நிலை காணப்படுகிறது. அமெரிக்காவின் நிதியுதவி மூலம், விசாரணைகள் கணினி மயப்படுத்தப்படவுள்ளன; ஆள்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன; ஆணைக்குழுவை வலுப்படுத்த உதவியாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

2016ஆம் ஆண்டில் மாத்திரம் ஆணைக்குழுவுக்கு 3 ஆயிரத்து 450 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இலங்கையில் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு அமெரிக்காவின் மிலேனியம் சவால் நிதியத்தின் மூலம், பல்வேறு திட்டங்களுக்கான உதவிகளை மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கும் இலங்கை அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ், 70 லட்சத்து 40 ஆயிரம் டொலர் கொடைகள் இலங்கைக்குக் கிடைக்கும். அமெரிக்காவுடன் இது தொடர்பான உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வதற்கு பிரதமர் ரணில் விக்கி ரமசிங்க சமர்ப்பித்திருந்த பத்திரத்துக்கும் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. (எ)

### நாவற்குழி அ.த.கவின் மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை21

கைதடி- நாவற்குழி அ.த.க.பாடசாலையின் மாணவர் நாடாளுமன்ற கன்னி அமர்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை இராசலிங்கம் கரையரங்கில் இடம்பெறவுள்ளது.

மாணவர் நாடாளுமன்றச் செயலாளர் நாயகமும் பாடசாலை அதிபருமான சி.சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வுக்கு தலைமை விருந்தினராகத் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பார் சு.கிருஷ்ணகுமார், சிறப்பு விருந்தினராக கலையரங்கை சீரமைத்து வழங்கிய திருமதி வள்ளி நாயகி இராசலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்பட்டது.

# சுகாதார முறைகளுக்கு அமைய திண்மக் கழிவுகளை அகற்றுவோம்

## மாகாண சுகாதார வைத்திய அதிகாரி ஆலோசனை

திண்மக் கழிவுகளை சுகாதார முறைப்படி அகற்றுவதற்கு ஒத்துழைக்கும்படி யாழ். மாகாண சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பி.ஜெசிதரன் கோரியிருக்கின்றார்.

இது தொடர்பில் மக்களுக்கு அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பிளாஸ்ரிக், பொலித்தீன், சொப்பிங் கைபக் கழிவுகளும் ரயர் போன்ற கழிவுகளும் ஆங்காங்கே எரியூட்டப்படுகின்றமை அவதானிக்கப்பட்டு வருகிறது. கழிவுகளை அகற்றிக் கொள்வதற்கு எரியூட்டுதல் ஒரு பாதுகாப்பான முறையல்ல. இவ்வாறு எரிப்பதனால் பல நச்சுவாயுக்கள் வளிமண்டலத்தினுள் விடப்படுகின்றன. இவை ஒவ்வாமை, சுவாசப் புற்றுநோய்கள் போன்ற வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தக் கூடியன. சிறுவர்களில் மூச்சுத் திணறலையும் ஏற்படுத்தலாம்.

எனவே, மேற்கூறிய கழிவுகளை எரியூட்டாது தவிர்த்தும், வீதிகளில் கண்டபடி வீசாது தவிர்த்தும், வேறாக சேமித்து, மாநகர சபை கழிவகற்றும் பிரிவினிடம் ஒப்படைக்குமாறு கேட் டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இவ்வாறு அகற்றப்படும் கழிவுகள், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படும்.

சருகுக் கழிவுகளை எரியூட்டாது கூட்டுப்பசளை உருவாக்கிப் பயன்படுத்திட முடியும்.

சுற்றுச் சூழல் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு கழிவுகளை எரியூட்டாது வேறு பிரித்து பொது சுகாதாரப் பொறியியல் பிரிவினரின் கழிவகற்றும் வாகனங்களில் கையளித்து ஆரோக்கியம் பேணும் வண்ணம் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். - என்று உள்ளது.

### டெங்குப் பகுதிகளுக்குச் செல்வோரை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

டெங்குக் காய்ச்சல் அதிகம் பரவியுள்ள பிரதேசங்களுக்குப் பயணிப்போரை விழிப்பூட்டும் விதத்தில்செய்திக் குறிப்பு ஒன்றை யாழ். சுகாதார வைத்தியர் பி.ஜெசிதரன் வெளியிட்டுள்ளார். அதன் விவரம் வருமாறு:-

டெங்கு நோய்த் தாக்கம் அதிகமாக உள்ள இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று வரும் பிரயாணிகள் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளமையுடன் இங்குள்ள அவர்களின் உறவுக ளுக்கும் இந்த நோய் கடத்தப்படும் அபாயம் அதிகம்.

குறிப்பாக, புத்தளம், நீர்கொழும்பு மற்றும் மேல் மாகாணத்தின் இதர பகுதிகளிலும் மத்திய மாகாணத்தின் பதுளை போன்ற பிரதேசத்திலும் டெங்கு நோய்த் தாக்கம் அதிகமாகவுள்ளது. எனவே இவ்விடங்களுக்குச் செல்லும் பயணிகள் நுளம்புக் கடியிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளவும் நுளம்பு விரட்டிகளை உபயோகத்தல், நுளம்பு வலையின் கீழ் உறங்குதல் போன்ற முற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் இங்கு வரும் பயணிகள், டெங்கு நோய்க்கான இரத்த சோதனையை காய்ச்சல் தொடங்கி 3 ஆம் நாள் செய்து கொள்ளவும். காய்ச்சலால் பீடிக்கப்பட்ட காலத்தில் நுளம்பு வலையின் கீழ் பூரண ஓய்வு எடுக்கவும். இயலுமாயின் காய்ச்சலுடன் பிரயாணம் செய்வதைத் தவிர்க்கவும்.

'வருமுன் காப்போம், டெங்கு மரணம் தவிர்ப்போம்'- என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னார் சவேரியார் பாடசாலை வளாகத்தில் நேற்று மர நடுகை



மன்னார், ஜூலை 21

ஒரு லட்சம் மர நடுகையை வளர்த்து மனித வாழ்வுக்கு நல்ல ஒட்சிசன் காற்றை எதிர்கால சந்ததியினர் சுவாசிக்க வேண்டும் என்ற ஜனாபதியின் சிந்தனைக்கு அமைவாக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலை வளாகத்தில் நேற்று மரநடுகை இடம்பெற்றது.

கல்லூரி அதிபர் அருட்செல்வன் எஸ்.றெஜினோல்ட் (டிலாசால் சபை) தலைமையில் மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரி.எம்.ஏ.என். ஐ.றொட்றிகோ மற்றும் எஸ்.ஐ. பியதிஸ்ஸ மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் மர நடுகையில் ஈடுபட்டனர். (எ-112)

# வரலாற்றில் முதன் முறையாக தேசிய இஸ்லாமிய கலாசார விழா

## ஜனாதிபதி தலைமையில் கம்பளையில்

கொழும்பு, ஜூலை 21

இலங்கை வரலாற்றில் முதல் முறையாக கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய இஸ்லாமிய தின கலாசரா விழா கம்பளை சா ஹிரா கல்லூரியில் ஜனாதி பதி தலைமையில் நவம்பர் மாதம் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன.

மீலாத் நபி விழா தொடர்பாக நாடளாவிய ரீதியில் நடத்தப் பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஜனாதிபதியால் சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்து இரண்டு நாள்கள் நடைபெறும் இந்த விழாவில் இலங்கை முஸ்லிம் மக்களின் கலை, கலாசார பொருளாதாரம், பண்பாடு,அபிவிருத்தி ரீதியிலான நிகழ்வுகள் உட்படப் பல நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.



இதுதொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல் ஒன்று கல்வி அமைச்சில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், இராஜாங்க அமைச்சின்செயலாளர்திஸ்ஸஹேவவிதான, கல்வி அமைச்சின் தமிழ்மொழிக் கல்வி அபிவிருத்திப் பிரிவுக்கான பணிப்பாளர் எஸ்.முரளிதரன், முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளர் இசட். தாஜூடீன், கம்பளை சா ஹிரா கல்லூரியின் அதிபர் ஏ.எல். சிராஜ், பாடசாலை யின் பகுதித் தலைவர்கள், கல்லூரியின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்,பழைய மாணவர் சங்க செயலாளர், உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

### வித்தியா படுகொலை வழக்கில் கைதான

# சிரேஷ்ட டி.ஐ.ஜி லலித் ஜயசிங்கவின் வழக்குச் செலவுக்கு நிதி உதவி கோரல்

## பொலிஸ் நிலையங்களில் தலா 25,000 ரூபா

கொழும்பு, ஜூலை 21

முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவின் சட்டத்தரணிக்கான கட்டணத்தைச் செலுத்துவதற்கு ஊவா மற்றும் மத்திய மாகாணத்தின் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் தலா 25 ஆயிரம் ரூபாய் நிதி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இருந்து வெளிவரும் ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் முக்கிய சந்தேக நபரான சுவிஸ் குமார்தப்பிச்செல்வதற்குஉதவிய குற்றச்சாட்டிலேயே லலித் ஜயசிங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் அவரது வழக்கில் ஆஜராகியுள்ள சட்டத்தரணிகானகட்டணத்தைசெலுத்துவதற்காக, லலித்ஜயசிங்க உதவி கோரியுள்ளார் என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதற்காக முடியுமான அளவு உதவுமாறு பொலிஸ் அதிகாரிகளிடம், பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவர்கோரிக்கைவிடுத்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்க மேற்படி இரண்டு மாகாணங்களிலும் சேவையில் ஈடுபட்ட போது, அவரால் பாதிக்கப்பட்ட பொலிஸார் மேற்படிநிதிஉதவிக்கோரிக்கைக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். அவர்களே இந்தத் தகவலை வெளிப்படுத்தியுள்ளனர் எனவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

லலித் ஜயசிங்கவுக்காக மஹிந்த தரப்பின் உயர் சட்ட ஆலோசகரான ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திதிஸ்ஸ ஆஜராகவுள்ளார் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைய முன்னாள் பொலிஸ் அதிகாரி லலித் ஜயசிங்கவின் வங்கிகணக்குகுற்றப் பிரிவு விசாரணை திணைக்களத்தினால் ஆய்வுசெய்யப்பட்டு வருகின்றது

இதன்போது அவரது கணக்கில் ஒருகோடி ரூபா பணம் நிலையான வைப்புச் செய்யப்பட்டுள்ளமை குற்றப் புலனாய்வு பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒரு கோடி ரூபா லலித் கொத்தலாவலவுக்கு சொந்தமாக கோல்டன் கீ நிதி நிறுவனத்தில் அவரது குடும்ப உறுப்பினரின் பெயரில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

அவரது தனிப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக பல லட்ச ரூபா பணம் மாதாந்தம் வைப்பிலிடப்படும் முறை தொடர்பில் குற்ற விசாரணை பிரிவினர் அவதானம் செலுத்தியுள்ளனர்.

இதேவேளை, வித்தியா கொலை வழக்கின் பிரதான சந்தேகநபரான சுவிஸ்குமார் யாழில் இருந்து கொழும்பிற்கு தப்பிச் செல்வதற்காக அவரால் 40 லட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டுள்ளதாக சாட்சியாளர் ஒருவரால் நீதிமன்றத்தில் சாட்சியம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ம)

### யாழ்.பல்கலை. விஞ்ஞானபீட மாணவர்கள் நேற்று வகுப்பு பகிஷ்கரிப்பு போராட்டம்

#### கனிஷ்ட மாணவரைத் தாக்கிக் காயப்படுத்திய சிரேஷ்ட மாணவரை உள்ளீர்க்கக் கோரிக்கை

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவர்கள் நேற்று வகுப்பு பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

மேற்படி பீடத்தில் புதிய மாணவர்கள் மீது பகிடிவதையில் ஈடுபட்டுஇருமாணவர்களைக்காயப்படுத்தியதால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட சிரேஷ்டமாணவர்கள் 8பேருக்கு ஆதரவு தெரிவித்து இந்தப் பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

கடந்த ஜூன் மாதம் 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இணைந்துகொள்ள வந்த புதிய மாணவர்கள் மீது சிரேஷ்டமாணவர்கள்பகிடிவதையில் ஈடுபட்டமையுடன் அவர்கள் மீதுதாக்குதலும்நடத்தினர்என்று கூறப்படுகின்றது. இதில், புதிய மாணவர்களில் இருவர் காயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு இரு தரப்பினரிடையேயும் இணக்கப்பாடு காணப்பட்டது.

ஆனாலும், பல்கலைக்கழக நிர்வாகம் அது தொடர்பாக விசாரணைகளைமேற்கொண்டு சம்பவத்துடன் தொடர்புடைய 8 மாணவர்களுக்கு கடந்த ஜூன் மாதம் 27 ஆம் திகதி வகுப்புத் தடை விதிக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த ஜூன் 28 ஆம் திகதி முதல் யாழ்.பல்கலைக்கழகவிஞ்ஞான பீடத்தின்முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டில் கல்விகற்கும் மாணவர்கள் வகுப்புப் பகிஷ்கரிப்பைமேற்கொண்டுவந்தனர்.

இந்நிலையில், நேற்றைய தினம் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் முதலாம் வருடம் தொடக்கம் நான்காம் வருடம் வரையான அனைத்து மாணவர்களும் வகுப்பு பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

வகுப்புத் தடைக்கு இலக்காகியுள்ள மாணவர்களை, மீண்டும் கல்வி நடவடிக்கைகளில் அனுமதிக்குமாறு வலியுறுத்தியே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம)

### ரயில் மோதி இளைஞர் பலி

மட்டக்களப்பு திராய்மடுவில் ரயிலில்மோதிஇளைஞன்ஒருவர் பலியானார். நேற்று வியாழக் கிழமை பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் 24 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவனே உயிரிழந்தார் எனக் கூறப்படுகின்றது.

இறந்த இளைஞன் அடையாளம் காணப்படாத போதிலும் அவர் சிங்கள இளைஞனாக இருக்கலாம் எனவும் அது தற்கொலையாகஇருக்கலாம்எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

சிங்கள மொழியில் கடிதம் ஒன்றை எழுதி வைத்துவிட்டே அவர் ரயிலில் மோதி உயிரிழந்தார் என ரயில் நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். அக்கடிதத்தில் 'நான் யாரும் அற்ற அநாதை' என எழுதப்பட்டிருந்தது எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ம)

### நீரின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுப் பகுதிகள் அழிக்கப்படுகின்றன. இதுவும் மழை பொய்த்து வறட்சி ஏற்படக் காரணம்."

–இவ்வாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பாவையும் வைத்துக் கொண்டு நேரடியாக முறைப்பாடு செய்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா, யாழ்.மாவட்ட அனர்த்தப் பாதிப்பு, நிர்வாகம் தொடர்பான கூட்டிணைப்புப் பிரிவின் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டார். யாழ்.செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அரசியல் பிரமுகர்கள், துறைசார் வல்லுநர்கள் மற்றும் அதிகாரிகள் பங்குபற்றினர்.

அங்கு உரையாற்றிய சமயமே முதலமைச்சர் மேற் கண்டவாறு கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவற்றின் சுருக்கம் வருமாறு:–

வழக்கமாக யாழ். மாவட்டத்தில் 82 கிராம சேவையாளர் பிரிவுகள் வறட்சியாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்படுகின்றன.

நெடுந்தீவில் பத்து மட்டக் குதிரைகள் உயிரிழந்தமை தொடர்பாக விசாரிக்க ஒரு குழுவை அண்மையில் நான் அங்கு அனுப்பி வைத்தேன்.

இந்த வறட்சி நிலையை ஒட்டி சில விடயங்களை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

முதலாவது – வறட்சியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீரை விநியோகிக்க ஒவ்வொன்றும் 12 ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளளவு கொண்ட இருபது பவுஸர்களாவது அவசரமாகத் தேவைப்படுகின்றன.

டிரக்டரில் பூட்டப்பட்ட டாங்கிகளுக்குப் பதிலாக லொறிகளில் பொருத்தப்பட்ட பவுஸர்களே உசிதமானவை.

இரண்டாவது – குறைந்தது ஐந்நூறு தண்ணீர்த் தாங்கிகளாவது அவசியம்.

மூன்றாவது – வறட்சியால் பாதிப்புற்ற விவசாயிகள் மற்றும்நன்னீர் வாவியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோரின் குடும்பங் களுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

நான்காவது – இது முக்கியமானது. ஆயுதப் படையினர் தம் வசம் வைத்திருக்கும் குடிதண்ணீர் வழங்கக்கூடிய முக்கிய கிணறுகளை உடனடியாக சம்பந்தப்பட்ட பிரதேச சபைகளிடம் ஒப்படைக்க வேண்டும். நெடுந்தீவு, பளை, இயக்கச்சி போன்ற பகுதிகளில் இத்தகைய கிணறுகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அந்தப் பிரதேச மக்கள் தண்ணீருக்காக அல்லலுறுகையில் படையினர் இவற்றை ஆக்கிரமித்திருக்கின்றமை பெரிய பாவமாகும்.

யுத்தம் முடிவடைந்து எட்டாண்டுகள் கழிந்து விட்டன. இராணுவத்தை விலக்குமாறு நாம் கோருவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமானது வளப்பற்றாக்குறை நிலவும் இச்சமயத்தில் அதில் அதிகமானவற்றை அவர்களும் பயன்படுத்துகின்றார்கள் என்பதாகும்.

இந்தக் கிணறுகளை விரைந்து பிரதேச சபைகளிடம் கையளிக்கச் செய்வதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்க்கிறேன்.

இந்த வறட்சி சமயத்தில் எமது நன்னீர் அதிகளவில் பயன்படுத்தப்பட்டால் அந்த நீர் அடியோடு வற்றி பெரும் பாதிப்புகள் ஏற்படும்.

ஐந்தாவது – வடமாகாணத்தில் உள்ள பல குளங்கள், நீர்த்தேக்கங்கள், கிணறுகள் அவசர அவசரமாகப் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

ஆறாவது – மழைக் காலத்தில் மழை நிரை நிலத்தடி நீராகவோ பிற வழியிலோ சேகரித்துச் சேமிக்கும் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அடுத்ததாக – எமது மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த பிரதேசங்களில் அவர்கள் விட்டுச் சென்ற மரங்கள் பெரிய விருட்சங்களாக வளர்ந்துள்ளன. ஆனால் வனத் திணைக்களம் அவற்றைத் தங்கள் நிலங்கள் என சொந்தம் கொண்டாட முயல்கின்றது.

அதேசமயம், எமது சமூகங்களில் ஒன்றைக் குடியேற்றுவதற்காக கூழாமுறிப்பு போன்ற பல அடர்ந்த காட்டுப் பகுதிகள் அழிக்கப்பட்டு, சுத்தப்படுத்தப்படுகின்றன.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் நானாட்டான் பகுதிகளில் மூன்று, நான்கு இடங்களில் இவ்வாறு நடைபெறுவது குறித்து அண்மையில் கூட நான் ஒஸ்ரின் பெர்னாண்டோவிடம் தெரியப்படுத்தியிருந்தேன்.

இத்தகைய விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும். – என்றார் முதல்வர் விக்னேஸ்வரன். (உ)

### நாட்டைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப்புக்கும் எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்குமிடையிலான சந்திப்பு நேற்றுக் காலை இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் பிரைஸ் ஹட்சிசனின் இல்லத்தில் நடை பெற்றது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனும் பங்கேற்றிருந்தார்.

அந்தச் சந்திப்பின் போது கருத்து வெளியிடுகையிலேயே சம்பந்தன் இவ்வாறு கூறினார் என கூட்டமைப்பின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

சந்திப்பின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கருத்து வெளியிடுகையில் தெரிவித்தவை வருமாறு:–

இந்த நாட்டின் அனைத்து மக்களும் சேர்ந்து ஏற்றுக்கொண்ட ஓர் அரசமைப்பு இதுவரை உருவாக்கப்படவில்லை. இதுவே நாட்டில் நிலவிய போருக்கு முக்கிய காரணம். ஆகவே, அவ்வித மானநிலைமையைமுழுமையாக நீக்கிக்கொள்வதாக இருந்தால் புதியதொரு அரசமைப்பை அனைத்துத்தரப்பினரும்சேர்ந்து உருவாக்க வேண்டும். இதற்கு சர்வதேச சமூகம் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். அவ்வாறான அரசமைப்பு நாட்டில் சமத்துவத்தையும், நிரந்தரமான சமாதானத்தையும் ஏற்படுத்த வேண்டும். அத்தகைய சமாதானம் ஏற்படும் பட்சத்தில் தான் இந்த நாட்டுக்கு சிறந்த எதிர்காலம் இருக்கும். பொருளாதார ரீதியாக முன்னேற முடியும். பல்வேறு கஷ்டங்களில் இருந்து இந்த நாட்டை மீட்டெடுக்க முடியும்.

விசேடமாக அரசமைப்பு விடயம் சம்பந்தமாக இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது. எனவே, ஒரே நாட்டுக்குள் எவ்விதமான பிளவும் ஏற்படாமல் ஒற்றுமையாக இருக்கும்வகையில் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையிலான புதிய அரசமைப்பொன்று உருவாக்கப் படவேண்டும். அந்த அரசமைப்பு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தினோம்.

தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றாக இணைந்து ஆட்சியில் உள்ளன. தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு இது நல்லதொரு சந்தர்ப்பமாகும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியல் சாசன ரீதியாக தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த வேண்டும். அந்தச்சந்தர்ப்பத்தை இழந்துவிடாது இரு பிரதான கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அரசமைப்பு செயற்பாடுகளில் இலக்கை அடைவதற்காகஅர்ப்பணிப்புடன்பணியாற்ற வேண்டும். மக்களும் அதற்கு அங்கீகாரமளிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

போரால் பாதிக்கப்பட்டவடக்கு, கிழக்கில் சில விடயங்களை முன்னெடுப்பதில் அரசு மிகவும் மெதுவாகவே செயற்படுகின்றது. இதனால் மக்கள் எதிர்பார்ப்பு சிதைவடைந்துள்ளது. அரசின் மீதான நம்பிக்கை குறைந்து வருகிறது.

குறிப்பாக, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாகக் கூறிய அரசு, அது விடயத்தில் இதுவரை ஆக்கபூர்வமாக எதையும்செய்யவில்லை. அரசின் அக்கறை தொடர்பில் சர்வதேச சமூகம் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கு காத்திரமான தீர்வு வழங்கப் படவேண்டும்.

அரசியல் கைதிகள் விரைந்து விடுதலை செய்யப்பட வேண்டும்.

பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் எந்தவிதமான தாமதமுமின்றி விடுவிக்கப்பட வேண்டும் எனவும் எடுத்துரைத்தோம்.

போர் நிறைவடைந்து எட்டு வருடங்களாகியும் எமது மக்கள் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பவில்லை.

இந்த நிலைமை தொடர்ந்து நீடித்துச் செல்லமுடியாது. அரசு நிச்சயமாகஉடன்நடவடிக்கையை எடுக்கவேண்டியுள்ளது என்றும் குறிப்பிட்டோம்.

எமது கருத்துகளை ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

இதன்போது ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப், நல்லிணக்க நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்கும், அரசமைப்பு செயற்பாட்டை முன்னெடுப்பதற்கும் தொடர்ச்சியான ஆதரவை ஆஸ்திரேலியா வழங்கும் எனவும், தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகள் குறித்தும் தான் பிரதமருடனான சந்திப்பின்போது சுட்டிக்காட்டுவார் எனவும் குறிப்பிட்டார்" – என்றார் சம்பந்தன்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## தலைவர்களின் மொழித்திறன்

என்னதான் அரசியல் வேறுபாடுகள், கருத்து முரண்பாடுகள், பிளவுகள், பிரச்சினைகள் இருந்தாலும் தாம் ஒரு பழுத்த - முதிர்ந்த - சிரேஷ்ட - தலைவர் என்பதை கொழும்பு ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்த சமயம் நிரூபித்திருக்கின்றார் வடக்கு மாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன்.

அது, பாராட்டப்படவும் விதந்துரைக்கப்படவும் வேண்டிய ஒன்று.

தமிழர்கள் பிளவுண்டு நின்றால் தென்னிலங்கைக்கு வாசி. அதைக் காட்டியே தீர்வு விடயத்தை நீர்த்துப்போக வைத்து, தமிழர் களைப் பின்னடையச்செய்துவிடலாம் என்பது தெற்கின் கணக்கு. பிள்ளையான்களுக்கும் கருணாக்களுக்கும் முன்னுரிமை தந்து வந்ததெல்லாம் இந்தக் கணக்கின்பாற்பட்டதே.

தமிழர் தரப்புக்குள் அதிருப்தி அடையும் பக்கத்தைத் தேடிச் சென்று - நாடிச் சென்று - தூக்கிப் பிடிப்பது தென்னிலங்கையின் பரவணிப் பண்பு.

அப்படி நினைத்துக் கொண்டுதான், முதல்வர் விக்னேஸ்வரனையும் அணுகியிருப்பார்கள் போலும். கேள்விகள் அவ்வாறு தான் அமைந்தன.

ஆனால், நீதியரசர் தமது மதியூகத்தனத்தால் அந்தக் கேள்விகளை முறியடித்துத் தமது தலைமைத்துவப் பண்பியல்பை வெளிப்படுத்தி உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

மாற்றுத் தலைமை பற்றிக் கேட்டதும் முதல்வர் விழுந்தடித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கு மாற்றான கருத்துக்களைக் கொட்டித் தள்ளுவார் என எதிர்பார்த்தோருக்கு ஏமாற்றமே காத்திருந்தது.

*''கூட்டமைப்பின் தலைமை - குறிப்பாக நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் - இன்னும் கொஞ்சம் வலிமையாக இருக்கலாம். என்றாலும் (கூட்டமைப்பின் தலைமையின் கீழ்) தமிழ் மக்களின் அரசியல் பாதுகாப்பே உள்ளது.''* - என்று கூறியிருக்கிறார் முதலமைச்சர்.

அது மட்டுமன்றி, நாம் இப்பத்தியில் அடிக்கடி சுட்டிக்காட்டும் ஒரு விடயத்தை அருமையான சொல்லாடல்களில் முன்வைத் திருக்கின்றார் அவர்.

*"நாங்கள் ஒன்று பட்டால் எழுவோம்; நிமிர்வோம். பிளவுபட்டால் வீழ்வோம்; தோற்போம்!"* - என்ற அருமையான உண்மையை அவர் எடுத்துரைத்திருக்கின்றார். அதுவும் நல்ல சொல்லாடலில்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றத் தலைமை குறித்து அவர் குறிப்பிட்ட கருத்துகள் கூட கவனிக்கத் தக்கவையே.

கூட்டமைப்பின் நாடாளுமன்றத் தலைமை இன்னும் வலிமையாக இருக்க முடியும் என்பதைச் சுட்டிக் காட்டும் அவர், பலவீனம் எங்கு என்பதையும் கோடி காட்டுகின்றார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால், முதலில் இரண்டு பெரிய தேசிய இனங்களும் தத்தமது நிலைப்பாடுகள், கருத்துக்களை மற்ற இனத்துக்குத் தெளிவுற உணர்த்தவேண்டும்.

தமிழர்கள் தங்களின் எதிர்பார்ப்புக்கள், ஆதங்கங்கள், அபிலாஷைகள், அவாக்கள், துன்ப, துயரங்கள், பாதிப்புக்களை சிங்களவர்களுக்கு எடுத்தியம்ப வேண்டும்.

அது போன்றே, சிங்களவர்கள் தங்களுக்கு உள்ள எச்சரிக்கை உணர்வு, பாதிப்பு, அச்ச நிலைமை, சிக்கல்கள் போன்றவற்றை வெளிப்படுத்தவேண்டும்.

இவற்றை பரஸ்பரம் பரிமாறி, கலந்துபேசி, கருத்தொற்றுமை காணும் இடமே நாடாளுமன்றம்.

இந்த இலங்கைத் தீவின் இரண்டு பெரிய தேசிய இனங்களின் கருத்துக்களும் சங்கமிக்கும் பிரதான தளம் - களம் - அதுதான்.

கருத்துப் பரிமாற்றத்துக்கு முக்கியமான ஊடகம் மொழி.

அந்த நாடாளுமன்றத் தளத்திலே கருத்தை ஊடறுத்துச் சொல்லும் மொழி விடயத்தில் நமது பின்னடைவையே, நமது கூட்டமைப்பில் நாடாளுமன்றத் தலைமைத்துவத்தின் பலத்தில் ஒரு குறையாக நீதியரசர் விக்னேஸ்வரன் காண்கின்றார். அவரது கருத்துத் தவறானதன்று. ஏற்கப்பட வேண்டியது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் பெரும்பான்மை இனத்தவர்களின் பிரதிநிதிகளில் மிக அதிகமானோருக்கு தமிழ் புரியவே புரியாது. பெரும்பாலானோருக்கு ஆங்கிலமும் மட்டுமட்டு.

மறுபுறத்தில் வடக்கு, கிழக்குத் தமிழர்களைப் பிரதிநிதிப்படுத்தும் தமிழ் உறுப்பினர்களில் கணிசமானோருக்கு சிங்களத்தில் பேச இயலாது. நம்மவர்களிலும் பலருக்கும் ஆங்கிலமும் மட்டமட்டுத்தான்.

இந்தச் சீத்துவத்தில் நமது பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் தமிழில் வெட்டி வீழ்த்துவது 'குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டும்' வேலையன்றி வேறில்லை.

இதையே விசனத்துடன் சுட்டிக்காட்டுகின்றார் முதல்வர் விக்னேஸ்வரன்.

உண்மையையும் அரசியல் நிலைவரங்கள் பற்றிய சூழலையும் பொறுப்புடன் எடுத்துக் கூறும் முதல்வரின் இந்தக் கருத்துகள், கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவையே.

# தேசிய சுகாதாரக்கொள்கைகள் வகுக்க அமைச்சரவை அனுமதி

தேசிய சுகாதாரக் கொள்கைகள் தொடர்பான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சு தெரிவித்தவை வருமாறு:-

சமகாலத்தில் 1996ஆம் ஆண்டு வரையப்பட்ட சுகாதாரக் கொள்கைகளே நடைமுறையில் இருக்கின்றன. துறையில் ஏற்பட்ட மாற்றங்களை கருத்திற் கொண்டு புதிய கொள்கை உருவாக்கப்படும்.

சுகாதாரத்துறை சார்ந்த கல்விமான்கள், விற்பனர்கள் ஆகியோரது பங்களிப்புடன் சுகாதாரக் கொள்கையை வகுக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நோயாளர்களின் உரிமைகளையும், சமூக நீதியையும் உறுதி செய்வது அரசின் நோக்கமாகும்.

இதன்மூலம் சிறந்த சுகாதார சேவையை வழங்கக் கூடிய வாய்ப்பு உருவாகுகிறது. தனியார் சுகாதார சேவைகளுக்காக மக்கள் கூடுதலான பணத்தைச் செலவிடும் தேவையும் நீங்குகிறது.-என்றுள்ளது.

இதுதொடர்பான யோசனையை சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியதுறை அமைச்சர் ராஜித சேனாரத்ன அமைச்சரவையில் சமர்ப்பித் திருந்தார்.

# ஆஸியில் தஞ்சம் கோரிய இலங்கைத் தமிழரை அமெரிக்காவில் குடியேற்றுவதிலும் சட்டச் சிக்கல்

நவ்ரு மற்றும் மனுஸ் தீவுகளில் தங்க வைக்கப்பட்டிருக்கும் இலங்கைத்தமிழ் அகதிகள், அமெரிக்காவின் தீவிரவாத சட்டத்தால் அங்கு குடியேறும் வாய்ப்பு நிராகரிக்கப்படலாம் என்று ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் வெளியிட்ட செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஆஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் அகதிகளாகச் சென்றவர்களில், அடைக்கலம் பெறுவதற்குத் தகுதி பெற்ற ஒரு தொகுதியினரை நவ்ரு மற்றும் மனுஸ் தீவுகளில் உள்ள கடல் கடந்த முகாம்களில் ஆஸ்திரேலியா தங்க வைத்துள்ளது,

அவர்களை மூன்றாவது நாடு ஒன்றில் குடியேற்றுவதற்கான முயற்சிகளிலும் ஆஸ்திரேலியா ஈடுபட்டுள்ளது.

அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய, நவ்ரு மற்றும் மனுஸ் தீவு முகாம்களில் உள்ள ஆயிரத்து 250 அகதிகளைத் தமது நாட்டில் குடியேற்றுவதற்கு அமெரிக்கா இணங்கியிருந்தது.

இதுதொடர்பான விசாரணைகளும் அமெரிக்க குடிவரவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எனினும், நவ்ரு மற்றும் மனுஸ் தீவு முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் 240 பேரில், பெரும்பாலானவர்கள், அமெரிக்காவில் குடியேறும் வாய்ப்பை இழக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க இரட்டைக் கோபுர தீவிரவாதத் தாக்குதலை அடுத்து அமெரிக்காவில் கொண்டு வரப்பட்ட தேசப்பற்று சட்டத்தாலேயே இலங்கைத் தமிழ் அகதிகள் அமெரிக்காவில் குடியேறுவதற்கான தகுதியை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கத்தின் கீழ் பெரும்பாலான தமிழ்ப் பிரதேசங்கள் இருந்தன. இதனால், அங்கு வாழ்ந்தவர்கள், விடுதலைப்புலிகளுக்குப் பொருள் உதவி வழங்கியவர்கள் என்ற வகைக்குள் உள்ளடக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

குடியேற்றக் கொள்கை தொடர்பான வொஷிங்டன் நிறுவனத்தின் இணை நிறுவுனரான கத்தே நியூலன்ட் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

'இந்தப் பொருள் ஆதரவு என்ற விடயம் மிகவும் பரந்துபட்ட ஒன்று. பணம், உணவு, இருப்பிடம், பயிற்சி மற்றும் எல்லா வகையான உதவிகளும் இதில் உள்ளடக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் அகதிகள் அங்கு சித்திரவதை அபாயங்களை எதிர்கொண்டுள்ளனர். இதனை ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்ஸனும் கடந்தவாரம் உறு திப்படுத்தியிருக்கிறார்.

இந்த நிலையில், நவ்ரு மற்றும் மனுஸ் தீவுகளில் உள்ள அகதிகளுக்கு மாற்று இடம் ஒன்றைத் தேடவேண்டிய நிலை ஆஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

அங்கு தங்கியுள்ள அகதிகளை மூன்றாவது நாடு ஒன்றில் குடியேற்றுவதற்கு நாம் தொடர்ந்து பணியாற்றுகிறோம். இல்லாவிட்டால், பப்புவா, நியூ கினியாவில் குடியமர்வதைவிட அவர்களுக்கு வேறு வழியில்லை என்று ஆஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிசப் தெரிவித்துள்ளார்.- என்றுள்ளது.

# சமாதான நீதிவான்களுக்கு ஒழுக்க நெறிக் கோவை

## அங்கீகாரம் அளித்தது அமைச்சரவை

கொழும்பு, ஜூலை 21

சமாதான நீதிவான்களை சேவையிலிருந்து இடைநிறுத்தல், சேவையை ரத்துச் செய்தல் மற்றும் நிறுத்துதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கி, ஒழுக்க நெறிக் கோவை ஒன்றைச் செயற்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

அதற்காக, 1978ஆம் ஆண்டு 2 ஆம் இலக்க நீதிமன்ற கட்டமைப்பு சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷவால் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி, அமைச்சரவைப் பத்திரத்தில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

தற்போது நியமிக்கப்பட்டுள்ள சமாதான நீதிவான்கள், தாம் நியமனங்களைப் பெறும் போது வசித்த பிரதேச செயலாளர் பிரிவுக்கு உரிய நிர்வாக மாவட்டத்துக்காக நியமிக்கப்பட்டுள்ளனர் என்று கருத வேண்டும்.

அத்துடன், சமாதான நீதிவான்களுக்கான ஒழுக்கநெறிக் கோவை ஒன்றைச் செயற்படுத்தும் நோக்கில் அவர்களின் சேவையை இடைநிறுத்தல், ரத்துச் செய்தல் மற்றும் நிறுத்துதல் போன்ற அம்சங்களை உள்ளடக்கி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் இந்தச் சட்டம் திருத்தப்படவுள்ளது.

அதற்காக, சட்ட வரைஞர் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கப்படும். - என்றுள்ளது. (எ)

கண் பூ கற்றாக்ற்

- கண்ணில் ஏற்படும் வெள்ளையை இலகுவாக சத்திரசிகிச்சை மூலம் நீக்கி, கண்வில்லை ஒன்றை உட்பரித்து சாதாரண பார்வையை பெற்றுக் கொள்ள முடியும்.
- அரசாங்க பொது வைத்திய சாலைகளில் இதனை இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

22.07.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : திருவாதிரை பி.ப 12.50வரை
திதி : சதுர்த்தி மா.6.48 வரை
சுபநேரம் : 3.01 – 4.31 வரை
இராகுகாலம் : 9.01 – 10.31 வரை

# டெங்கு ஒழிப்புக்கு அவசர சட்டம்!

கொழும்பு, ஜூலை 21

கொழும்பு மற்றும் சன நெருக்கடியான பிரதேசங்களில் முறையற்ற விதத்தில் திண்மக் கழிவுகளை அகற்றுவதைத் தடுத்தல் மற்றும் டெங்கு நோய் தொற்றலைக் கட்டுப்படுத்தல் ஆகியவை தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள உள்ளது.

அண்மையில்இடம்பெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொழும்பு மற்றும் சனநெருக்கடி மிகுந்த பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்து நிர்மாண கட்டடங்களிலும், அந்த நிர்மாண நடவடிக்கைகளின் சட்ட ரீதியான உரிமையாளர், ஒப்பந்தகாரர் மற்றும் ஏனைய உரிய தகவல்கள் அடங்கிய பெயர் பலகையை தயாரித்தல் அவசியமாகும்.

பாடசாலைகள், அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களில் டெங்கு நுளம்புகள் பரவும் வகையில் இடம்கொடுக்கும் நபர்களுக்கு எதிராக அவர்களின் பெயர்களிலேயே தனியார்வழக்குத் தொடரல்.

உள்நுழைவதற்கு கடினமாக முறையில் மூடிக் காணப்படும் வீடுகள் மற்றும் சொத்துக்களினுள் உள்நுழைந்து பரீட்சிப்பதற்கும், அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள் வதற்கும் ஏற்ற வகையில் பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் விதிமுறைகளை விதித்தல்.

கட்டுப்பாட்டு அறையை 24 மணி நேரமும் செயற்படுத்துவதற்கு அவசியமான அதிகாரிகளை அனுமதித்து அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல்.

மேலும், இவ்வாறான நடவடிக்கைகளுக்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபா மற்றும் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க ஆகியோர் இணைந்து முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# கேப்பாப்பிலவு காணி விடுவிப்பு மக்களை ஏமாற்றும் வித்தை!

### நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 21

கேப்பாப்பிலவு காணி விடுவிப்பு நடவடிக்கை மக்களை ஏமாற்றும் வித்தை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

கேப்பாப்பிலவு காணி விடுவிப்பு தொடர்பில் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்ட கேப்பாப்பிலவு காணியில் 180 ஏக்கர் மக்களுக்குக் கையளிக்கப்படும் என்று கூறி சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் வருகை தந்தார்.

அவரால் விடுவிக்கப்படும் எனஅடையாளப்படுத்தப்பட்ட காணிகளில் 141 நாள்களாகத் தொடர் போராட்டம் நடத்தும் மக்களின் காணிகள் எவையும் அடங்கவில்லை.

மத்தியதர வர்க்கத்தினர் ஆறு பேருக்கு வழங்கப்பட்ட காணியையும் அரசுக்கு சொந்தமான



காணியையும்விடுவிப்பதற்கே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்தக் காணிகள் தற்போது வன திணைக்களத்துக்குச் சொந்தமானவை என எல்லையிடப்பட்டுள்ளது.

மேலும் மத்திய தர வர்க்கத்தில் உள்ள காணி உரிமையாளர்கள் ஆறு பேரும் இந்த நாட்டில் இல்லை. ஆகவே, இந்தக் காணியை அமைச்சர் யாருக்கு விடுவிக்கின்றார்? அரசுக்கா?

141 நாள்களாக போராடி வரும் மக்களின் ஒரு துண்டு காணியைக்கூட விடுவிக்க முடியாத அமைச்சர், மக்களின் எதிர்ப்பலைகளைத் தாக்குபிடிக்க முடியாது ஆடம்பர நிகழ்வாக செய்ய நினைத்த நிகழ்வைக் கைவிட்டுவிட்டுத் திரும்பியுள்ளார்.

மக்களின் நியாயமான கோரிக்கைக்கு மதிப்பளித்து அவர்களின் காணியை விரைவில் விடுவிக்கவேண்டும் என்று அமைச்சரை கேட்டுக் கொள்கின்றேன். - என அவர் தெரிவித்துள்ளார்.

# அரசமைப்புப் பணிகளிலிருந்து கூட்டு எதிரணி விலக மாட்டாதாம்!

அரசமைப்பு உருவாக்கும் செயற்குழு மற்றும் அரசமைப்பு பேரவை ஆகியனவற்றிலிருந்து விலகிக்கொள்ளப் போவதில்லை என கூட்டு எதிரணி தீர்மானம் எடுத்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் சுயாதீனமாக இது குறித்து தீர்மானம் எடுக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கட்சிகளும் தங்களது அடையாளங்களை உறுதி செய்யும் வகையில் தீர்மானம் எடுக்க அனுமதி அளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் தேசிய சுதந்திர முன்னணி அரசமைப்பு பேரவையிலிருந்து விலகிக் கொண்டுள்ளது.

இந்த நிலையில், பொது எதிர்க்கட்சியினர் அரசமைப்பு பேரவையிலிருந்து விலகிக் கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, மஹஜன எக்சத் பெரமுன, லங்கா சமசமாஜ கட்சி, ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட்கட்சி மற்றும் பிவித்துரு ஹெல உறுமய ஆகியன அரசமைப்புப் பேரவையில் தொடர்ந்தும் அங்கம் வகிக்க விருப்பம்வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆளில்லா விமானப் பயன்பாடு: இலங்கையில் புதிய சட்டங்கள்!



கொழும்பு, ஜூலை 21

ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்துவது தொடர்பில் இலங்கையில் புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்படஉள்ளன.

வீடியோ பதிவுகளுக்காகப் பயன்படுத்தப்படும்ஆளில்லா விமானங்களும் (ட்ரோன்கள்) அதனை பயன்படுத்துவோரும் தங்களைப் பதிவுசெய்து கொள்ளும் வகையில் நாடாளுமன்றில் புதிய சட்டம் உருவாக்கப்படவுள்ளது.

சிவில் விமான சேவை அதிகார சபையில் பதிவு செய்து கொள்ள வேண்டியது கட்டாயமாக்கப்படும் வகையில் சட்டங்கள் இயற்றப்படவுள்ளன.

தற்போது இந்த ஆளில்லா விமானங்கள் முறையற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றன எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சிவில் விமான சேவை அதிகார சபையின் அனுமதி மட்டுமன்றி, பாதுகாப்பு அமைச்சு தொடர்பான பகுதியின் கலாசார, தொல்பொருள், வடிகாலமைப்பு, சக்திவள அதிகார சபைகளினதும் பொலிஸ் நிலையத்தினதும் அனுமதி பெற்றுக்கொள்ளும் வகையில் புதிய சட்டம் உருவாக்கப்படவுள்ளது என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கொழும்பு ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

ஆளில்லா விமானங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதால் விமான விபத்துக்கள் ஏற்படக்கூடிய சாத்தியம் உண்டு என்றும் பாதுகாப்புக்கும் அச்சுறுத் தலை அது ஏற்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் பொழுதுபோக்கு அல்லது கல்வி நோக்கத்துக்காக 200 கிராமுக்கு குறைந்த எடையுடைய 150 அடி உயரம் வரையில் செல்லக்கூடிய சிறிய ரக ட்ரோன்களை பயன்படுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட அனுமதி அவசியமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சில நபர்கள் ட்ரோன்களைத் தவறாகப் பயன்படுத்தி தனிப்பட்ட அந்தரங்க விடயங்களை வீடியோ பதிவிட்டுக் கொள்கின்றனர் எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# புதிய விமான நிலையம், துறைமுகம் இலங்கையில் அமைக்க நடவடிக்கை!

### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 21

இலங்கையில் புதிய விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உலகளாவிய ரீதியில் கோடீஸ்வரர்களைக் கொண்ட பெரிய சந்தையில் இலங்கையையும் இணைக்கும் நடவடிக்கையை சமகால அரசு ஆரம்பித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஐரோப்பிய வர்த்தக சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொருளாதார வளர்ச்சி முன்னுரிமைகளை மீண்டும் அமைத்தல் தொடர்பான நிகழ்வில் கலந்து கொண்டு பிரதமர் உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்-

500 மில்லியன் கோடீஸ்வரர்களை கொண்ட உலக சந்தைக்குள் நுழையும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

கண்டியில் இருந்து அம்பாந்தோட்டை வரையிலான பகுதியை பொருளாதார மையமாக மாற்றத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

புதிய விமான நிலையங்கள் இரண்டு புதிய துறைமுகங்கள் இரண்டுடன் புதிய பொருளாதாரம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுபான்மை இன மக்களுடைய பாதுகாப்பு அரசமைப்பில் உறுதி செய்யப்படவேண்டும்!



வேண்டுகோள் விடுக்கிறார் கிழக்கு முதல்வர்

திருகோணமலை, ஜூலை 21

புதிய அரசமைப்பில் சிறுபான்மையின மக்களுடைய பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். அத்துடன், சட்டம் இயற்றும் சபையான நாடாளுமன்றத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக எந்தவொரு சட்டத்தையும் இயற்ற முடியாது என்ற சரத்தும் புதிய அரசமைப்பில் உள்வாங்கப்பட வேண்டும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் ஜெப்ரி பெல்ட்மன் ஆகியோருக்கு இடையில் திருகோணமலையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய அரசமைப்பில் சோல்பரி யாப்பின் 29 ஆம் சரத்தின் 2 ஆம் பிரிவு இணைக்கப்பட வேண்டும்.

சோல்பரி யாப்பின் 29 ஆம் சரத்து, அதற்கு அடுத்து வந்த அரசமைப்புக்களில் இருந்து நீக்கப்பட்டது. இதன்காரணமாகவே இனங்களுக்கு இடையே விரிசல்கள் ஏற்பட்டன.

இதனால், சிறுபான்மையினர் மத்தியில் உள்ள சந்தேகங்கள் மற்றும் அச்ச நிலைமையை மாற்றும் விதமாக மீண்டும் அரசமைப்பில் இந்த சரத்து இணைக்கப்பட வேண்டும்.

அதேபோன்று பௌத்த மதத்துக்கு அரசமைப்பில் முன்னுரிமை அளிக்கின்றமை தொடர்பில் எமக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை.

ஆனால், ஏனைய மதங்கள் மற்றும் சமூகங்களுக்கும் உரிய இடம் அளிக்கப்பட வேண்டும். அவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும், மாகாணசபைகளுக்குரிய அதிகாரங்கள் வலுவூட்டப்பட வேண்டும்.

யுத்தம் முடிந்து பல ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆனால், இன்னும் பொது மக்களின் காணிகள் கையளிக்கப்படாமல் உள்ளன. காணி தொடர்பான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டியமை அவசியமாகும். -என்றார்.

(ச)

## நல்லிணக்கத்தை மறந்துவிட்டு

# பிரிந்து வாழ்வதற்குரிய வழிவகைகளையே அனைவரும் தேடிக் கொண்டிருக்கின்றனர்!



மட்டு. அரச அதிபர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 21

இந்த நாட்டில் நல்லிணக்கத்தை மறந்துவிட்டு பிரிந்து வாழ்வதற்குரிய வழிவகைகளையே அனைவரும் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

தேசிய ஒருங்கிணைப்பு, நல்லிணக்க அமைச்சின் அனுசரணையில் நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு தன்னாமுனை மியானி நகரில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

25 இற்கும் மேற்பட்ட மொழிகளில் பேசிக்கொண்டிருந்த இத்தாலி நாட்டில், ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தீர்மானத்துக்கு வந்தார்கள். அதன் அடிப்படையில் 25 பிரதேசங்களும் ஒன்றிணைக்கப்பட்டு இத்தாலி என்ற ஒரு நாடு உருவாக்கப்பட்டது.

ஆனால், நான்கு இனங்களையும் நான்கு மதங்களையும் இரண்டு மொழிகளையும் கொண்டிருக்கின்ற இந்தச் சிறிய நாட்டில், மேலும் பிரிந்து வாழ்வதற்குரிய வழிகளைத் தேடிக்கொண்டிருக்கின்றோம்.

எவ்வாறு எங்களுக்குள்ளே பிரிவுகளை ஏற்படுத்தலாம் என்பதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கின்றோமே தவிர, நாங்கள் சேர்ந்து வாழ்வதற்கான வழிமுறையைக் காண்பதற்குத் தயங்கியே நிற்கிறோம். நல்லிணக்கம் என்று சொல்லப்படுகின்ற விடயம் வார்த்தைகளில் மட்டுமே பேசப்படுகிறது.

இந்த நிலைமை மாறவேண்டும். இந்த நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு பிரஜைகளும் குறிப்பாக இளைய சமூகம்இதைப்பற்றி சிந்திக்க வேண்டும். -என்றார்.





காரைதீவு நந்தவன ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த ஆடி மகோற்சவ திருவிழாவின் பாற்குடப் பவனி நேற்றுமுன் தினம் புதன்கிழமை காலை சிறப்பாக இடம் பெற்றது.

இந்தப் பாற்குடப் பவனியில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

(ச)

## காத்தான்குடியில் நேற்று விபத்து: ஒருவர் படுகாயம்!

காத்தான்குடி வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர் மீது டிராக்டர் மோதி விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்தவர் படுகாயம் அடைந்தார்.

நேற்று வியாழக் கிழமை காலை இடம் பெற்ற வீதி விபத்தில், எம்.நூர்முஹம்மது (வயது-56) என்பவரே படுகாயம் அடைந்தவர் ஆவார்.

அவர் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்என காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விபத்தை ஏற்படுத்திய டிராக்டர் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(ச)

# வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்த காத்தான்குடியில் நடவடிக்கை!



காத்தான்குடி, ஜூலை 21

காத்தான்குடிப் பகுதியில் வீதி விபத்துகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் வேகக் கட்டுப்பாட்டுத் தடைகள் மற்றும் வீதி இணைவுப் பகுதிகளைச் சீர்செய்யும் நடவடிக்கைகள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டன.

கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக்கின் வேண்டுகோளுக்கமைவாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, காத்தான்குடி ஊர் வீதியுடன் வந்து இணையும் உள்ளக வீதிகளின் இணைவுப் பகுதிகளில் உள்ள குழிகள் சீர்செய்யப்பட்டன. மேலும் பாடசாலைகள் அமைந்துள்ள பகுதிகளில் போக்குவரத்துக் குறியீட்டுப் பலகைகள் பொருத்தப்பட்டன.

## உருக்குலைந்த நிலையில் திருகோணமலையில் சிசுவின் சடலம் மீட்பு!

திருகோணமலை, ஜூலை 21

திருகோணமலை - அரியமான்கேணி காட்டுப் பகுதியில் பிறந்து சில நாள்களேயான சிசு ஒன்றின் சடலம் உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச்சடலம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

ஆடு மேய்த்துக் கொண்டிருந்த நபர் ஒருவரே மேற்படி சிசுவின் சடலம் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் சேருநுவர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ச)

# மனித உரிமைகள் விவகாரத்தில் ஐ.நாவுடன் அரசு முரண்படாது!

### அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 21

மனித உரிமைகள்விவகாரத்தில் ஐ.நாவுடன் இலங்கை அரசு முரண்படாது என்று அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் பென் எமர்ஸன் தொடர்பாக, நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ காட்டமான கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரின்போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக, ஐ.நாவுடன் முரண்பட்ட முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசின் கொள்கையை, தற்போதைய அரசு கடைப்பிடிக்காது.

ஐ.நாவுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டதன் விளைவாக, முன்னைய அரசு எவ்வாறு சர்வதேச சமூகத்தால் ஓரம்கட்டப்பட்டது என்பதை நாம் அறிவோம்.

அதே கொள்கையை நாம் கடைப்பிடிக்கமாட்டோம். ஐ.நாவுடன் இராஜதந்திர முறையில் செயற்படுவதே அரசின் கொள்கையே தவிர, முரண்படுவதல்ல.

இலங்கை அரசு ஐ.நாவுடன் ஒத்துழைக்காது என்று ஐ.நா அறிக்கையாளர் எமர்ஸன் நிலைமைகளைத் தவறாகப் புரிந்துகொண்டார்.

அரசியல் கைதிகள் தொடர்பான வழக்கு தொடுக்கும் விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பணிகளில் தாமதம் நிலவுகிறது.

அரசியல் கைதிகளை அச்சமின்றி விடுதலை செய்து ஏனையவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர வேண்டும்.

வழக்கும் தொடரும் பணிகளை விரைவாக மேற்கொள்வதாக சட்டமா அதிபர்திணைக்களம் தெரிவித்திருந்தது.

எனினும், இதுவரை அந்தப் பணிகள் இடம்பெறவில்லை. வழக்குத் தொடரும் நடவடிக்கைகள் மிகவும் தாமதமாகவே உள்ளன.

1971 மற்றும் 1988 கலவரங்களில் ஈடுபட்டவர்களை அரசியல் கைதிகளாக விடுவித்தமை போல, இவர்களை விடுவிக்க வேண்டும்.

ஏனெனில் அவர்கள் அனைவரும் மறுபக்கம் செல்ல மாட்டார்கள். ஏனெனில், அரசியல் கைதிகளை அச்சமின்றி விடுதலை செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஆஸ்திரேலியா – இலங்கை வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இரண்டு நாள்கள் பயணமாக ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் நேற்றுமுன்தினம் மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவர் நேற்றுமுன்தினம் இரவே வெளிவிவகார அமைச்சில், அமைச்சர் ரவி கருணாநாயக்கவைச் சந்தித்துப் பேச்சுக்களில் ஈடுபட்டார்.

இதையடுத்து, இருவரும் இணைந்து கூட்டாக ஊடகவியலாளர்களைச் சந்தித்தனர்.

ஆஸ்திரேலியப் வெளிவிவகார அமைச்சருடனானபேச்சுக்கள் ஆக்கபூர்வமானவையாக இருந்தனஎன்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார ஒத்துழைப்பு, அபிவிருத்தி ஒத்துழைப்பு, ஆட்கடத்தலைத் தடுத்தல், கல்வி மற்றும் திறன் விருத்தி, சுற்றுலா, நல்லிணக்கம், இலங்கையின் அபிவிருத்தியில் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களின் பங்களிப்பு உள்ளிட்ட இருதரப்பு விவகாரங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

கடல்சார் பாதுகாப்பு உள்ளிட்ட பிராந்தியப் பாதுகாப்பு சவால்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினோம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, இலங்கையில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஆஸ்திரேலியா முழு ஒத்துழைப்பை வழங்கும் என்று அந்த நாட்டின் வெளி விவகார அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

# தேர்தலைப் பிற்போடுவதற்கு ஒரு போதும் தயார் இல்லை!

### தேர்தல் ஆணைக் குழுவின் பணிப்பாளர் தெரிவிப்பு

மாகாண சபை தேர்தல் பிற்போட முடியாது என தேர்தல் ஆணைக்குழுவின் சட்ட ஆலோசனை பிரிவின் பணிப்பாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மாகாண சபை தேர்தல் பிற்போட முடியாது. எனினும், அவ்வாறு செய்ய வேண்டுமானால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் சென்ற வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த 1999 ஆம் ஆண்டுவடமேல் மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப் பட்டமை தொடர்பாகவும் அவர் இதன்போது நினைவு கூர்ந்துள்ளார்.

கடந்த 1999 ஆம் ஆண்டு வடமேல் மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமையை எதிர்த்து சுயாதீன குழு நீதி மன்றத்தில் வழங்குத் தாக்கல் செய்திருந்தது.

இதையடுத்து, இரண்டு வாரங்களில் தேர்தலை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதற்கமைய, தேர்தலை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது எனவும் தேர்தல் ஆணைக்குழுவின் சட்ட ஆலோசனை பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் ஒப்புதல் வாக்குமூலங்கள் ரத்து: இலங்கை அரசுக்கு பரிந்துரைத்தது ஐ.நா!

கொழும்பு, ஜூலை 21

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சந்தேக நபர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களை ரத்து செய்ய வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸில் இலங்கை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

புலிகளின் சந்தேக நபர்கள்பொலிஸாரிடம் அளித்த அனைத்து ஒப்புதல் வாக்குமூலங்களையும் ரத்து செய்ய வேண்டும் எனவும் ஐ.நா கோரியுள்ளனர்.

இதற்காக பயங்கரவாதத்தை ஒழிக்கும் புதிய உத்தேச சட்டத்தில் திருத்தங்களைச் செய்யவேண்டும் எனவும் மனித உரிமைப் பேரவை அரசிடம் கோரியுள்ளது.

இந்த உத்தேச திருத்தச் சட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இலங்கைப் பிரதிநிதிகளை எதிர் வரும் இரண்டு வார காலப் பகுதிக்குள் ஜெனீவாவுக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பயங்கரவாத சந்தேக நபர்களின் ஒப்புதல்வாக்குமூலங்களை ரத்து செய்வதன் மூலம் அவர்களை விடுதலை செய்ய ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை முயற்சிக்கிறது என கொழும்பு ஊடகமொன்று குற்றம் சுமத்தியுள்ளது.

# பாடசாலை ஆசிரியர் மீது தாக்குதல்; சந்தேக நபர்கள் நால்வர் கைது!

வவுனியா, செட்டிகுளம், முதலியார்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று செட்டிகுளம் பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பாடசாலை முடிந்ததும் தனது விடுதிக்குச் சென்ற ஆசிரியர் ரஞ்சித் கண்ணா (வயது- 29) என்பவர்சில இளைஞர் களால் தாக்கப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த செட்டிகுளம் பொலிஸார் இந்தச் சம்ப வத்துடன் தொடர்புடையவர்கள் என்றசந்தேகத்தின் அடிப்படையில் நான்கு இளைஞர்களை கைது செய்து நேற்று முன்தினம் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா நீதிமன்றம் அவர்கள் நால்வரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. அன்றைய தினம் அடையாள அணி வகுப்பு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

(எ-100)

# லசந்த எவ்வாறு கொலை செய்யப்பட்டார் இரசாயனப் பகுப்பாய்வு அறிக்கை தாமதம்!

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலை வழக்கின்பகுப்பாய்வுஅறிக்கை இன்னும் கிடைக்கவில்லை என நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்கிசை பிரதம நீதிவான் மொஹமட் நிஹயிம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

லசந்த விக்ரமதுங்கவின் கொலைக்கான காரணத்தை வெளிப்படுத்துமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்திடம் கோரியுள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பிலான இரண்டு பிரேத பரிசோதனை அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டுள்ளமையால், இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முதலாவதாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில், லசந்த விக்ரமதுங்க துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள் ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மூன்று சட்ட மருத்துவ அதிகாரிகள் வெளியிட்டுள்ள இரண்டாவது பிரேதப்பரிசோதனை அறிக்கையின்படி லசந்த விக்ரமதுங்கவின் தலையில் ஆயுதம் ஒன்றால் தாக்கியமையால் அவர் கொலை செய்யப்பட்டுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, அவர் எவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் என்பதைக் கூறுமாறு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திடம் கோரியுள்ளது.

இதன்போது, கொலை சம்பவம் தொடர்பில் மருத்துவ அறிக்கை கிடைத்தாலும் பகுப்பாய்வு அறிக்கை இன்னும் கிடைக்கவில்லையென நீதிவான் கூறியுள்ளார்.

(க)

# சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



யாழ்ப்பாணம், ஜுலை 21

கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உரும்பிராய் மேற்கில் வசிப்பவருமாகிய மாணிக்கம் ஜேசுசுதாகரன் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் அண்மையில் சத்தி யப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் ஆரம்பக்கல்வியை கல்முனை சிங்கள மத்திய மகா வித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை அம்பாறை டீ.எஸ். சேனாநாயக்க தேசிய பாடசாலையிலும், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் பட்டத்தை அம்பாறை ஹாடி உயர் கல்வி தொழில் நுட்ப கல்லூரியிலும் கற்றவர்.

மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற இவர் தி எக்ஸ்பிறஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட் மற்றும் தி.அசோஸியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் ஒப் (சிலோன்) லிமிட்டெட்டடில், (லேக்-ஹவுஸ்) பிராந்திய விற்பனை முகாமையாளராகவும் கடமையாற்றியுள்ளமையுடன் லேக் ஹவுஸ் - யாழ்ப்பாணக் கிளையின் முகாமையாளராகவும் நீண்ட காலம் கடமையாற்றியுள்ளார். (இ)

## தினசரி ராசி பலன் 21.07.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆடித் திங்கள் 06 ஆம் நாள் திரயோதசித்திதி இரவு 9.50 மணி வரை. பின்னர் சதுர்த்தசி. நட்சத்திரம்: மிருகசீரிடம் பகல் 2.53 மணி வரை. பின்னர் திருவாதிரை. சித்தயோகம் முழுவதும் ராகுகாலம்: பகல் 10.42 மணி முதல் 12.06 மணி வரை. சுபநேரம்: காலை 6 மணி முதல் 7.32 மணி வரை. இன்று பிரதோஷ விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி: ஆடிமாத தேய்பிறை திரயோதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: மிருகசீரிடம்.**

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் மத்திமமாக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். தொழிலில் கடும் உழைப்பு இருக்கும். யாரையும் நம்பி பிணைபோதல் கூடாது.

**ரிஷபம் :** யோகமான பலன்கள் காணப்படுகின்றன. தனலாபம் அதிகரிக்கும். வீடு, வாகன வசதிகள் பெருகும். வெளிநாட்டு உறவினர்களால் அநேக நன்மைகள் உண்டாகும்.

**மிதுனம் :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் வளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். வியாபாரம் நன்கு அபிவிருத்தி அடையும்.

**கடகம் :** கவலையான நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். திருமணகாரியங்கள் இழுபறியில் இருக்கும்.

**சிம்மம் :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உத்தியோகத்தில் உயர்வுகள் எதிர்பாரா வகையில் கிடைக்கும்.

**கன்னி :** சமபலன்கள் காணப்படுகின்றன. தேகசுகம் ஓரளவு சீராக இருக்கும் எண்ணிய காரியங்கள் தாமதமாகும். வியாபாரம் ஏறு, இறங்கு முகமாக நடக்கும். பயணத்தின் போது அவதானம் தேவை.

**துலாம் :** மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் எல்லையற்ற மகிழ்ச்சி காணப்படும். எண்ணிய கருமம் துல்லியமாய் நிறைவேறும். நீண்ட காலம் பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும்.

**விருச்சிகம் :** துன்பமான நாள் தனவரவு குறையும். குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகும். தொழிலில் பல இடையூகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் ஏற்படும்.

**தனுசு :** சமபலன்கள் காணப்படுகின்றன. செலவினங்கள் அதிகரிக்கும். தொழிலில் கடின உழைப்பு, அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**மகரம் :** இன்பமான நாள். நீண்டநாள் காணாதிருந்த உறவினர்களைக் கண்டு மகிழ்வார்கள். பிரிந்த குடும்பங்கள் ஒன்றுசேரும் வாய்ப்புண்டு. திருமண காரியங்கள் ஒப்பேறும். கொடுக்கல், வாங்கல் சுமுகமாக நடக்கும்.

**கும்பம் :** யோகமான நாள். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். அசையாச்சொத்துகளை வாங்கும் யோகம் உண்டாகும். உத்தியோகத்தர்கள் சிலருக்கு உயர்வுகள் கிடைத்து வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம் :** கவலையான நாள். பணவரவு குறையும். நீண்டகால நண்பர்கள் பிரிய நேரிடும். தொழிலில் கடின உழைப்பால் மனம், உடல் சோர்வடையும்.

**சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் கால், அனுஷம், சேட்டை ஆகிய நட்சத்திரங்களில் உதித்தோர் இந் நாளில் சுபகருமங்கள் ஆரம்பிப்பதைத் தவிர்க்கவும்.**

# முறிகண்டியில் யானை அட்டகாசம் சேதமாக்கப்பட்டன பயன்தரு மரங்கள்

முல்லைத்தீவு, ஜுலை 21

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முறிகண்டி பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நுழைந்த யானை ஒன்று பயன்தரு தென்னை மரங்கள், வாழை மரங்கள் உள்ளிட்டவற்றை சேதமாக்கியுள்ளது என பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



அந்தப் பகுதியில் அமைந்துள்ள தனியார் காணிக்குள் நுழைந்த யானை காணியில் பயன் தரக்கூடிய நிலையில் இருந்த 30 தென்னைகள் வரை முறித்துள்ளதுடன், அங்கு நடப்பட்டிருந்த வாழை மரங்களையும் சேதமாக்கியுள்ளது.

இதுதொடர்பில் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர் கூறுகையில்-

'அந்த யானை தனித்தே அங்கு வந்துள்ளது. அதி காலை ஒரு மணி வரை யானையைத் துரத்தும் முயற்சியில் ஈடுபட்டு அயலவர்களின் உதவியுடன் அது விரட்டி அடிக்கப்பட்டது.'-என்றார்.

நாட்டில் நிலவும் கடும் வறட்சியான காலநிலையில் பாதிக்கப்பட்டுள்ளகிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே குளங்களின் நீர் வற்றியுள்ள நிலையில் விவசாயம் கைவிடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் யானையின் தாக்கத்தாலும் மக்கள் நாளாந்தம் பாதிக்கப்பட்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# கிளி.அரச அதிபரால் உதவிப் பொருள்கள் வழங்கி வைப்பு



மாற்றுத்திறனாளி ஒருவருக்கும் விபத்தால் முள்ளந்தண்டு பாதிக்கப்பட்ட ஒருவருக்கும் உதவிப் பொருள்கள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

சமூகசேவைகள் அமைச்சின் சமூக மட்ட புனர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 12 வயதுச் சிறுவனுக்கு 16 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான மலசலகூட வசதியுடன் கூடிய சக்கர நாற்காலியும் விபத்தால் பாதிக்கப்பட்ட 30 வயதான பெண்ணொருவருக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான காற்று மெத்தையும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், வைத்திய அதிகாரி ஜெயராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஐந்து ஆடைத்தொழிற்சாலைகள் குருநாகலில் திறந்து வைப்பு!

குருநாகல், ஜுலை 21

குருநாகல் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேசங்களில் சிறிய ஆடைத் தொழிற்சாலைகள் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தொலம்புகல, மாகோ, நிகவரட்டிய, ஆரியாகம, பொல்காவெல ஆகிய ஐந்து பிரதேசங்களிலேயே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



நாட்டில் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் யுவதிகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்கில் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வழிகாட்டலில் நாடளாவிய ரீதியில் சிறிய ஆடைத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு அங்கமாக மேற்படி ஆடைத் தொழிற்சாலைகள் திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிராமிய பொருளாதார பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ். அமீர் அலி, அனுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஸ்ஹாக் ரஹ்மான், புத்தளம் மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்முஹம்மட் நவவி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் குருநாகல் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஷாபி, 'சதொச' நிறுவனத்தின் பிரதித் தவிசாளர் எஸ்.நஸீர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர்.(எ)

ஆங்கிலத்தில் -Tejshree Thapa
வழிமூலம் - Daily FT
மொழியாக்கம் - நித்தியபாரதி



# நம்பிக்கையை கட்டி எழுப்ப தவறி வரும் அரசு

போர் என்பது பல்வேறு அழிவுகளைக் கொண்டது. இது உயிரிழப்பு மட்டுமல்லாது, காயங்கள் மற்றும் உடைமை அழிவுகள் போன்ற பல்வேறு அழிவுகளைக் கொண்ட ஒன்றாகும். ஆனால், இந்த யுத்தம் தொடர்ந்தும் அவநம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

இந்த யுத்தத்தால் ஏற்படும் வடுக்களை ஆற்றுப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. இதற்காக தொடர்பாடல்கள், புரிந்துணர்வுகள் போன்றனவும் தவறுகளைச் சரி செய்யும் உணர்வும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இந்தவகையில், உள்நாட்டு யுத்தம் இடம்பெற்ற இலங்கையில் இவ்வாறான நடவடிக்கைகள் கைக்கொள்ளப்படவில்லை.

குறிப்பாக தனது சொந்த மக்கள் மற்றும் அனைத்துலக சமூகத்தின் முன் இலங்கை அரசால் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் இவை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற மூன்று தசாப்த கால யுத்தத்தில் ஒரு லட்சம் வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன், பலர் காயமடைந்தனர், தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்தனர். இந்த யுத்தம் நாட்டில் வாழும் சிறுபான்மைத் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் மற்றும் பெரும்பான்மை சிங்கள சமூகத்துக்கும் இடையில் பெரிய பிளவை உண்டுபண்ணியது.

ஒக்ரோபர் 2015 இல் இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் நாட்டில் இடம்பெற்ற பல்வேறு மீறல்களுக்கும் நீதி மற்றும் பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்படும் என இலங்கை அரசால் வாக்குறுதி வழங்கப்பட்டதற்கு இணங்க 2016 இல் இலங்கைத் தீவு முழுவதிலும் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தப் பணிக்காக இலங்கை அரசால் 11 பேர் கொண்ட ஆலோசனைச் செயலணிக் குழு நியமிக்கப்பட்டது. இதில் பல இன மற்றும் மத, பிராந் தியங்களைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டமையுடன் இதன் தலைமை உட்பட அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் பெண் பிரதிநிதிகளாகவும் இருந்தனர்.

இந்தச் செயலணிக்குழுவின் கலந்தாலோசனை மிகவும் சிக்கலானதாக இருந்தது. அதாவது, பிராந்திய செயலணிக் குழுவில் உள்ளூர் சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் அரசியல், பால்நிலை சார்ந்த, சுகாதாரத் துறை சார்ந்த மற்றும் மதத் தலைவர்களின் பிரதிநிதிகள் அங்கம் வகித்தனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களில் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர்.

இலங்கை அரசின் குறைந்தளவு ஆதரவுடன் இந்தப் பணியை மேற்கொள்வதில் பல்வேறு இடர்கள் காணப்பட்டன. குறிப்பாக பாதுகாப்புப் படையினரின் கண்காணிப்பு காரணமாக மக்கள் கலந்துரையாடல்களில் பங்குபற்றுவதில் அச்சம் கொண்டிருந்தனர் எனவும் பிராந்திய செயலணி உறுப்பினர்கள், மனித உரிமைகள் கண்காணிப்பகத்திடம் தெரிவித்தனர்.

சிங்களவர்கள் அதிகம் வாழும் தென்னிலங்கையைச் சேர்ந்த மக்கள் இந்தக் கலந்துரையாடல்களில் அதிகம் பங்குபற்றியிருந்தனர். இலங்கை இராணுவ வீரர்களும் இதில் பங்கு பற்றியிருந்தனர் எனப் பிராந்திய செய லணிக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

> தனது சொந்த மக்கள் மற்றும் அனைத்துலக சமூகத்தின் முன் இலங்கை அரசால் பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் இவை இன்னமும் நிறைவேற்றப்படவில்லை.

இந்தச் செயலணிக் குழுவின் உறுப்பினர்கள் அச்சம் மற்றும் பல்வேறு சவால்கள் எழுந்த போதிலும் புரிந்துணர்வு மற்றும் இடைக்கால நீதியை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகப் பணியாற்றினர்.

ஓகஸ்ட் மாதம் 2016 இல் பிராந்திய செய லணிக் குழு தனது கலந்துரையாடல் பணிகளை முடித்துக் கொண்டதுடன் இறுதி அறிக்கைகளைத் தமது மாவட்ட மற்றும் மாகாணப் பிரதிநிதிகளிடம் கையளித்தன. இதன் பின்னர் ஆலோசனைச் செயலணிக் குழு இந்த அறிக்கைகளை வாசித்து அவற்றிலுள்ள முக்கிய விடயங்கள் மற்றும் பரிந்துரைகளைத் தொகுத்து மத்திய அறிக்கையைத் தயாரித்து ஜனவரி 3, 2017 அன்று அந்த அறிக்கையை இலங்கை அரசிடம் கையளித்தது. இந்த அறிக்கையில் காத்திரமான பல பரிந்துரைகள் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையில், தேசிய மற்றும் அனைத்துலக நீதிபதிகளை உள்ளடக்கிய யுத்தக் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான நீதிமன்றம் உருவாக்கப்பட வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த நீதிமன்றுக்கான அழைப்புக்கு சிங்களவர்களால் குறிப்பாக மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் பலவந்தமாகக் காணாமலாக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பாக இன்னமும் நீதியை எட்டாத சிங்கள சமூகத்தவர்களால் - ஆதரவு வழங்கப்பட்டது.

காணாமற் போதல்கள், நிதி மற்றும் சட்டச் சீர்திருத்தங்கள், அரசியல் தீர்வுகள், பல தசாப்தங்களாக நிலவும் நிலப் பிளவுகளுக்கான தீர்வு, உள சமூகத் தேவைகளுக்கான தீர்வுகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் செயலணிக் குழு பரிந்துரை செய்திருந்தது.

செயலணிக் குழுவால் இறுதி அறிக்கை கையளிக்கப்பட்டு ஆறு மாதங்கள் கடந்த நிலையில் இது தொடர்பில் இலங்கை அரசு இன்னமும் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. வெளிநாடுகளுக்குச் செல்லும் அதிகாரிகள் மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை நிறைவேற்றி வருவதைக் காண்பிப்பதற்காக ஆலோசனைச் செயற்பாடுகள் தொடர்பாக தற்பெருமை பேசுகின்றனர்.

ஆயினும், இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை இலங்கை அரசு முற்றிலும் அசட்டை செய்துள்ளது. பேரவையின் தீர்மானம் தொடர்பாக இலங்கை அரசை கண்காணிக்கும் வெளிநாட்டு அரசாங்கங்கள் 'ஏன் இலங்கை அரசின் பிறிதோர் அறிக்கையும் மௌனமாகத் தடைசெய்யப்பட்டுள்ளது?' எனவினவ வேண்டும்.

இதேவேளையில், தேசிய மற்றும் பிராந்திய ஆலோசனைச் செயலணிக் குழுவின் உறுப்பினர்கள் மத்தியிலும் குழப்பநிலை காணப்படுகிறது. இலங்கை அரசால் இவ்வாறான பல்வேறு விசாரணை ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும் இவற்றின் அறிக்கைகளும் புறக்கணிக்கப்பட்டன என ஆலோசனைச் செயலணிக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதிபர் சிறிசேனவின் அரசாங்கம் தன்னால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் தொடர்பில் இதயசுத்தியுடன் செயற்படும் என செயலணிக் குழுவின் உறுப்பினர்கள் நம்பியிருந்தனர். ஆனால், இந்த நம்பிக்கை தற்போது அவநம்பிக்கையாக மாறியுள்ளதாக செயலணிக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

''ஆலோசனைச் செயலணிக் குழுவால் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடல்கள் எவ்வித பக்கச் சார்பற்றனவாகவும் காணப்பட்டன. மக்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துக்கள் மிகவும் சிறப்பானவையாக இருந்தன. ஆனால், ஜனவரி 2017 இல், இலங்கை அரசு நடவடிக்கை எடுக்காத போது இதன் தாக்கத்தை உணர்ந்து கொண்டேன். குறிப்பாக மக்களின் கருத்துக்கள் தொடர்பாக இலங்கை அரசு அக்கறை காண்பிக்கவில்லை என பல ஆண்டுகளாக நம்பிக்கையைக் கட்டியெழுப்பு வதற்காகப் பணியாற்றிய சமுதாயத் தலைவர்கள் கருதுகின்றனர்.

''மக்கள் மத்தியில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீண்டும் ஒரு முறை தோல்வியுற்றன என ஆலோசனைச் செயலணிக்குழுவின் உறுப்பினர்கள் கவலைப்படுகின்றனர். ஆனால், இம்முறை இந்த வாக்குறுதிகள் நம்பிக்கைக்குரிய உள்ளூர் தலைவர்களால் வழங்கப்பட்டன. ஆனால், அவை நிறைவேற்றப்படவில்லை''.- என ஆலோசனைச் செயலணிக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் அதிருப்தி தெரிவித்தார்.

''மக்கள் எம்மீது கோபமாக உள்ளனர். என் மீதான நம்பிக்கையைக் கூட மக்கள் தற்போது இழந்துள்ளனர். தற்போது நானும் எனது நம்பிக்கையை இழந்துள்ளேன்''.- என பிராந்திய செயலணிக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் மனித உரிமைகள் கண்காணிப்பகத்திடம் தெரிவித்தார்.

இலங்கை அரசு ஆலோசனைச் செயலணிக் குழுவால் வழங் கப்பட்ட இறுதி அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை வெளிப்படையாகத் தெரிவிப்பதுடன், இதில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான உறுதிப்பாட்டையும் வழங்க வேண்டும்.

ஏனெனில் இந்த ஆலோசனைகளும் பரிந்துரைகளும் நாடு முழுவதிலும் வாழும் மக்களிடமிருந்தும் சகல இன மற்றும் மதம் சார் பிரதிநிதிகளிடமிருந்தும் பெறப்பட்டவை. ஆகவே, இந்தப் பரிந்துரைகள் வலுவான நீதிப் பொறிமுறைகளின் ஊடாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

இதன்மூலம் இலங்கை அனைத்துலக நீதியில் தன்னால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற முடிவதுடன் நீதி உட்பட அமைதியையும் இன்னமும் யுத்தம் முடியவில்லை எனவும் நம்புகின்ற தனது சொந்த நாட்டு மக்கள் மத்தியில் மீளவும் உறுதிப்பாட்டை இலங்கை அரசால் வழங்க முடியும்.




பொன்.வேணு கிருஷ்ணா

**ஒரு Su-27 பாதுகாப்பு போர் விமானம் நேட்டோ விமானத்தின் வழியில் குறுக்கிட்டு, அதன் ஆயுதங்களைக் காட்ட அதன் இறக்கைகளை சாய்த்துக் கொண்ட போதுதான், ஊடுருவிய நேட்டோ விமானம் விலகி பறந்து சென்றது.**

அண்மைய (21 June 2017) சம்பவத்தில், அமெரிக்க- மேலாதிக்கத்திலான இராணுவ கூட்டணியின் ஒரு போர்விமானம், பால்டிக் கடல் மீது லித்துவேனியா மற்றும் போலாந்துக்கு இடையே ரஷ்யாவின் மேற்கு பகுதியில் அமைந்துள்ளதும், பாதுகாப்பு அமைச்சர் Sergey Shoigu ரஷ்ய இராணுவ அதிகாரிகளைச் சந் திக்க திட்டமிட்டிருந்ததுமான கலினின் கிராடுக்கு பறந்து கொண்டிருந்த ரஷ்ய விமானத்தை நெருங்கியது. ஒரு Su-27 பாதுகாப்பு போர்விமானம் நேட்டோ விமானத்தின் வழியில் குறுக்கிட்டு, அதன் ஆயுதங்களைக் காட்ட அதன் இறக்கைகளை சாய்த்துக் கொண்டபோதுதான், ஊடுருவிய நேட்டோ விமானம் விலகி பறந்து சென்றது.

நேட்டோவின் இந்த அதிக ஆத்திரமூட்டும் நகர்வானது, பால்டிக் பிரதேசத்தில் குறிப்பாக ரஷ்யாவின் மேற்கு விளிம்போரத்தில் உள்ள புற-இராணுவச் சாவடியான கலினின்கிராடு சுற்று வட்டாரத்தில் அமெரிக்கா-நேட்டோ மற்றும் ரஷ்ய போர்விமானங்களுக்கு இடையே அதிகரித்துவரும் அடிக்கடி எதிர்கொள்ளல்களின் சமீபத்திய எடுத்துக்காட்டு மட்டுமே ஆகும். (22 June 2017இற்கு முந்திய திங்கள்) ரஷ்ய எல்லை நோக்கி பறந்து கொண்டிருந்த ஒரு அமெரிக்க RC-135 உளவு விமானம் ஒரு திருப்பம் எடுத்தது, இடைமறிக்கும் நடவடிக்கையில் இறக்கிவிடப்பட்டுள்ள ஒரு பால்டிக் போர்விமானமான Su-27 நோக்கிய ஒரு ''ஆத்திரமூட்டும் திருப் பமாக'' இதை மாஸ்கோ குறிப்பிட்டி ருந்தது.

(22 June 2017இற்கு முந்திய புதன்) நேட்டோ வெளியிட்ட ஓர் அறிக்கையில், Shoigu சென்ற விமானம் சம்பந்தப்பட்ட சம்பவத்தை ஒப்புக்கொண்டதுடன், அது பொது வான்வெளியில் நடந்த உண்மையையும் ஒப்புக் கொண்டது. இருப்பினும் வருத்தம் தெரிவிப்பதற்குப் பதிலாக, அந்த மேற்கு கூட்டணி, அது உரிய விதத்தில் நடந்து கொண்டதாகத் தெரிவித்ததுடன், எதிர்காலத்திலும் இதேவிதத்தில் செயல்பட அதற்கு சுதந்திரம் இருப்பதாக மறைமுகமாக குறிப்பிட்டது.

**கியேவில் ஒரு ரஷ்ய-விரோத, அதிதீவிரவலது ஆட்சியைநிறுவிய அமெரிக்க மற்றும் ஜேர்மன் ஆதரவிலான ஆட்சிக்கவிழ்ப்பு சதிக்குப் பின்னர் ரஷ்யாவின் மேற்கு எல்லையை ஒட்டி தொடங்கப்பட்ட அமெரிக்க-நேட்டோ அத்துமீறல்களின் விளைவாக, அந்த ஒட்டு மொத்த பகுதியும் ஓர் ஆயுத முகாமாக மாற்றப்பட்டுள்ளது.**

கலினின்கிராடில் Shoigu தரையிறங்கியதற்குப் பின்னர், ''சில நாடுகள் புவிசார் அரசியல் இலக்குகளை அடைவதற்கு ஒரு கருவியாக இராணுவ பலத்தைப் பயன்படுத்த முனைந்து




வருகின்றன'', என்று கூறி, உலகளாவிய பாதுகாப்பிற்கு இடர் உண்டாக்குவதற்காக மேற்கை குற்றஞ்சாட்டினார்.

நேட்டோ மற்றும் ரஷ்ய போர் விமானங்களுக்கு இடையே அபாயகரமான எதிர்கொள்ளல்கள், குறிப்பாக பால்டிக் பிரதேசத்தில் நடைமுறையளவில் அன்றாடம் நடக்கும் நடைமுறைகளாக ஆகியுள்ளன. 2014 பெப்ரவரியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ரஷ்ய-ஆதரவு அரசாங்கத்தை தூக்கியெறிந்து, கியேவில் ஒரு வெறிபிடித்த ரஷ்ய-விரோத, அதிதீவிர வலது ஆட்சியை நிறுவிய அமெரிக்க மற்றும் ஜேர்மன் ஆதரவிலான ஆட்சிக்கவிழ்ப்பு சதிக்குப் பின்னர் ரஷ்யாவின் மேற்கு எல்லையை ஒட்டி தொடங்கப்பட்ட அமெரிக்க-நேட்டோ அத்துமீறல்களின் விளைவாக, அந்த ஒட்டுமொத்த பகுதியும் ஓர் ஆயுத முகாமாக மாற்றப்பட்டுள்ளது.

**கிழக்கு ஐரோப்பா மற்றும் பால்டிக் மீதான வான்வெளியில் நேட்டோ-ரஷ்ய எதிர்கொள்ளல்களின் இந்த தற்போதைய கண்மூடித்தனம், நேட்டோவின் கிழக்கு பக்கவாட்டில் நடத்தப்பட்டு வரும் பல தொடர்ச்சியான பரந்த போர் சாகசங்கள் மற்றும் இராணுவ பயிற்சிகளுக்கு இடையே வருகிறது.**

பால்டிக்கடல் மீது கூட்டுப்படையின் வான்வெளியை (allied airspace) அணுகிய 32 ரஷ்ய இராணுவ விமானங்களை கடந்த வாரம் நேட்டோ இடைமறித்ததாக திங்களன்று லித்துவேனியாவின் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்தது. நேட்டோ மற்றும் கூட்டுப்படையின் அதிவிரைவு விமானங்கள், ஜூன் 12 மற்றும் 18 இற்கு இடையே, ரஷ்ய போர்விமானங்கள் மற்றும் குண்டுவீசும் அதிவிரைவு விமானங்களை ஒன்பது முறை சுற்றி வளைத்து விரட்டி அடித்தன என்றும் அது குறிப்பிட்டது.

இத்தகைய சம்பவங்களில் ஏதேனும் ஒன்று, வேண்டுமென்றே நோக்கம் கொண்டோ அல்லது தற்செயலாகவோ, குண்டுவீச்சு தாக்குதலில் அல்லது மோதலில் போய் முடிந்தால், அது ஒட்டுமொத்த உலகையே பாதிக்கும் அச்சுறுத்தலுடன், அந்த அணுஆயுத சக்திகளுக்கு இடையே ஒரு முழு அளவிலான போரை விரைவிலேயே தூண்டிவிடக்கூடும்.

எண்ணெய் வளம் மிக்க மத்திய கிழக்கு மற்றும் மத்திய ஆசியாவில் மேலாதிக்கம் கொள்வதற்கும் மற்றும் உலகளாவிய ஆதிக்கத்திற்கு வொஷிங்டனின் மிகப்பெரிய போட்டியாளராக உள்ள சீனாவை கையாள்வதற்கு அது இன்றியமையாததாக காணும் யுரேஷியா கண்டத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்குமான அதன் உந்துதலுக்கு மாஸ்கோ ஒரு தடையாக இருப்பதை நீக்கும் அதன் மூலோபாயத்தின் பாகமாக, வொஷிங்டன் ரஷ்யாவுடனான மோதலை முன்னெடுத்து வருகிறது.



கிழக்கு ஐரோப்பா மற்றும் பால்டிக் மீதான வான்வெளியில் நேட்டோ-ரஷ்ய எதிர்கொள்ளல்களின் இந்த தற்போதைய கண்மூடித்தனம், நேட்டோவின் கிழக்கு பக்கவாட்டில் நடத்தப்பட்டு வரும் பல தொடர்ச்சியான பரந்த போர் சாகங்கள் மற்றும் இராணுவ பயிற்சிகளுக்கு இடையே வருகிறது. இவற்றில் எல்லாம், போர்விமானங்கள், டாங்கிகள், கப்பல்கள் மற்றும் நடைமுறையளவில் சகல போர் பரிவாரங்களுடன் சேர்ந்து, இராணுவக் கூட்டணியின் உள்ளேயும் வெளியேயும் உள்ள நாடுகளின் பத்தாயிரக் கணக்கான துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஜூன் மாதத்தின் பெரும்பாகத்தில், அமெரிக்க இராணுவம் பால்டிக் பிரதேசத்தில் அங்கே உள்ள அதன் கூட்டாளிகளு டன் சேர்ந்து போர் தாக்குதல் (Saber Strike) என்றழைக்கப்படும் அதன் வருடாந்தர தொடர்ச்சியான கோடைக்கால போர் ஒத்திகைகளை நடத்தி வருகிறது.

ஜூன் மாத தொடக்கத்தில், போலந்து மற்றும் ஜேர்மனியில் நேட்டோ அதன் வருடாந்தர BALTOPS (பால்டிக் நடவடிக்கை) பயிற்சியை நடத்தியது, பெல்ஜியம், டென்மார்க், எஸ்தோனியா, பிரான்ஸ், ஜேர்மனி, லாட்வியா, நெதர்லாந்து, நோர்வே, போலாந்து, இங்கிலாந்து, அமெரிக்கா, பின்லாந்து மற்றும் ஸ்வீடன் உள்ளடங்கலாக 14 நாடுகளின் 6,000 துருப்புகள் இதில் ஈடுபடுத்தப்பட்டன. சுமார் 50 கப்பல்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல்களும், B-1 மற்றும் B-52 குண்டுவீச்சு விமானங்கள் உட்பட 50 இற்கும் அதிகமான போர்விமானங்களும் இதற்காக ஒருங்கிணைக்கப்பட்டிருந்தன.

பால்டிக் கடலில் போலாந்தின் Ustka இல் கடற்கரையையே புரட்டிப் போட்ட ஒரு பயிற்சியைக் குறித்து அங்கிருந்தே ஒரு புகைப்பட செய்தியறிக்கையை ரூபேர்ட் முர்டோச்சின் Sun சிற்றிதழ் வழங்கியது, அதில் அப்பத்திரிகை ஆர்வத்துடன் எழுதுகையில், சிப்பாய்களும் வாகனங்களும் கடற்கரையில் ஈடுபட்டிருந்த நிலையில், விமானங்கள் படையின் பயங்கர காட்சியை காட்டுவதில் தலைக்கு மேல் ரீங்காரமிட்டு பறந்தன, என்று குறிப்பிட்டது. ''நாங்கள் பயிற்சி செய்ய விரும்புகிறோம் மற்றும் கடலிலும் கடலில் இருந்தும் பலத்தைக் காட்டுவதை மற்றும் கடல் மீதான கட்டுப்பாட்டை வழங்குவதற்கான ஆற்றலை எடுத்துக்காட்ட விரும்புகிறோம்'', என்று அமெரிக்க கடற்படை அட்மிரல் கிறிஸ்டோபர் கிராடி கூறியதை அக்கட்டுரை மேற்கோளிட்டது.

""Noble Jump 17'' என்று குறிப்பிடப்பட்ட ரஷ்யாவிற்கு எதிராக திருப்பி விடப்பட்ட மற்றொரு பயிற்சி, இம்மாதம் ருமேனியாவின் சிர்சுவில் நடத்தப்பட்டது. நேட்டோவின் அதிவிரைவுதயார்நிலை கூட்டு நடவடிக்கை படையை பரிசோதிக்க வடிவமைக்கப்பட்ட அது, இங்கிலாந்து, அமெரிக்கா, ருமேனியா, நெதர்லாந்து, அல்பேனியா, ஸ்பெயின், போலாந்து மற்றும் நோர்வே இல் இருந்து துருப்புக்களை உள்ளெடுத்து இருந்தது.

முடிவில்லாமல் தொடர்ச்சியான போர் சாகசங்கள் மற்றும் இராணுவ பயிற்சிகளுக்குக் கூடுதலாக, 20 ஆண்டுகளுக்குமுன்னர்கையெழுத்தான நேட்டோ-ரஷ்ய ஸ்தாபக சட்டத்தை மீறி, 6,000 சிப்பாய்களைக் கொண்ட மொத்தம் நான்கு போர் குழுக்கள், நடைமுறையளவில் நிரந்தர நிலைநிறுத்தலாக, பால்டிக் நாடுகள் மற்றும் போலாந்தில் நிலைநிறுத்தப்பட்டு வருகின்றன. இதற்கும் கூடுதலாக, 10,000 பேர் கொண்ட பிரத்தியேக பலமான படைப்பிரிவு ஒன்றும் ருமானியாவில் நிறுவப்பட்டு வருகிறது மற்றும் 10,000 துருப்புகளை உள்ளடக்க உள்ள ஒரு டாங்கி படைப் பிரிவும் போலாந்தில் அமெரிக்காவினால் நிலைநிறுத்தப்பட்டு வருகிறது.



(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



40




## அத்தியாயம் - III

## பாலா நாடு கடத்தப்பட்டார்

இந்திய அரசு எம்மை நாடு கடத்தக் கூடும் என்பதை அன்று மதிய உணவின்போது விவாதித்திருந்தோம். அன்று வெயில் அகோரம். பாலா ஒரு குட்டித் தூக்கம் போட்டு எழுந்தார். முகம் கழுவி, உடுத்திக்கொண்டு அலுவலகம் போகத் தயாராகிக் கொண்டிருந்தபோது, எமது மாடிக்கு முன்னே நிறைய காவல் துறை ஜீப் வண்டிகள் வந்து நின்றன. காக்கிச் சீருடை தரித்த காவல் துறையினர் வெளியே குதித்து, அந்தப் பகுதியை சுற்றி வளைப்பது போல, வேறு நிலைகளில் நின்றார்கள். காவல் அதிகாரிகள் அணி ஒன்று படி ஏறி வந்து கதவைத் தட்டியது. ஓர் இக்கட்டான அல்லது அசௌகரியமான சந்தர்ப்பத்தில், ஓர் இசகு பிசகான செய்தியைத் தெரிவிக்க, ஒரு பொருத்தமான ஆளைத் தெரிவு செய்து அனுப்புவது ஒரு பொது மரபு. ஆகவே, இதற்காக ஜம்போகுமார் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டிருந்தார். பாலாவின் நண்பர் இவர். தமிழ் நாடு, புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்; 1983 ஆம் ஆண்டில் சென்னைக்கு நாம் வந்ததில் இருந்து, எம்மோடு பழக்கம். இந்திய அரசின் கடுமையான ஒரு நடவடிக்கையை நோகாது புரிவதற்காக, ஒரு காவல் துறை அணியோடு அவர் அனுப்பப்பட்டிருந்தார். பாலாவுக்கு எதிராக நாடு கடத்தல் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக மிகவும் வருத்தத்துடனும் மரியாதையுடனும் அவர் எடுத்துக் கூறியமை, கட்டளையின் குரூரத்தைக் குறைத்தது. பாலாவும் நானும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். வருவது வரட்டும் என்பதுபோல பதற்றம் எதுவுமின்றி, காவல் அதிகாரிகளுடன் பாலா வெளியே சென்றார். லண்டனுக்குச் செல்லும் அடுத்த விமானம் வரும் வரைக்கும் காவல் துறைக் காவலில் இருக்க அவர் புறப்பட்டுச் சென்றார்.

துரிதமாகவும் தீர்க்கமாகவும் பாலாவின் கைது இடம்பெற்றது. திடீரென எமது மாடிக்கு காவல் துறைப் பிரிவு வந்தது; அவரைக் கதவுக்கு வெளியே அழைத்துச் சென்றது. மறுகணம் அவர் சென்றுவிட்டார். ஆனால், எனது நிலை என்ன என்பது அரச கட்டளையில் கூறப்படவில்லை. ஆகவே, நாடு கடத்தல் கட்டளையில் நான் இல்லை என்று புரிந்து கொண்டேன். உடனடியாக ஒரு முச்சக்கர வண்டியில் ஏறி, பிரபாகரனும் ஏனைய போராளிகளுக்கும் அறிவிப்பதற்காக அரசியல் பணிமனைக்கு விரைந்தேன். பயிற்சி முகாம்களில் இருந்த பிரபாகரன் உடனே தலைமறைவானார். தண்டனை நடவடிக்கை அவருக்கு எதிராகவும் எடுக்கப்படலாம் என்று நாம் எதிர்பார்த்ததே அதற்குக் காரணம்.

பாலாவைப் பற்றிய செய்திக்காகவும் அவர் நாடு கடத்தப்படும் நேரத்தை அறியவும் அடையாறில் உள்ள அரசியல் பணிமனையில் காத்திருந்தேன். ஒழுங்கான சட்ட முறையைக் காவல் துறை கடைப்பிடிக்கும் என்றும், அவர் எங்கே வைக்கப்பட்டிருக்கிறார் என்பது போன்ற விவரங்களை காவல் துறை வழங்கும் என்றும் நான் பைத்தியக்காரத்தனமாக நம்பிக் காத்து நின்றேன். இருளத் தொடங்க எனது மனக்கலவரம் அதிகரித்தது. அவர் எங்கே என்று அறிவிக்கப்படாததால், பயங்கரக் கற்பனைகளும் மனதில் தோன்றின. ஒரு விபத்து நடக்கவில்லை என்றோ, அவர் கொல்லப்படவில்லை என்றோ எப்படி நம்புவது? ஏனென்றால் நாம் சம்பந்தப்பட்ட அரசியல் அத்தகையது. எனது நல்ல காலம், பாலாவிடம் அரசியல் பாடம் படித்த போராளிகள் சிலர் அரசியல் பணிமனையில் பணி புரிந்து கொண்டிருந்தார்கள். எனக்கு உதவ அவர்கள் தயாராக இருந்தார்கள். நம்பிக்கையான, விசுவாசமான நண்பர்கள் என்பதையும் நிரூபித்தார்கள். எம்மை எமது வீட்டில் இருந்து அரசியல் பணிமனைக்கு ஒவ்வொரு நாளும் கூட்டிச் செல்லும் குரு என்ற போராளியை வழியில் கண்டேன். அவரையும் கூட்டிக் கொண்டு மெரீனா கடற்கரைக்கு முன்பாக உள்ள புலனாய்வுக் காவல் துறை ('கியூ' பிரிவுத்) தலைமைப் பணிமனைக்கு விரைந்தேன். அங்கே போய்ச் சேர்ந்த போது இருட்டிவிட்டது. எனது உள்மனம் இருட்டாகவே இருந்தது. மற்றவர்களுடைய தொடர்பு துண்டிக்கப்பட்டு, தனியாக வைக்கப்பட்டிருந்த பாலாவை எப்படி நடத்தினார்களோ என்பது ஒரு கவலை. அதைவிட, வீட்டில் இருந்து போகும் போது அவர் இன்சுலின் மருந்து கொண்டு போகவில்லையே என்பது இன்னொரு கவலை. காவல் துறைப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சென்றடைந்தபோது, கொதியுடன் போனேன். பாலா எங்கே என்று அறியவேண்டும்; அவரைப் பார்க்க அனுமதி பெற வேண்டும். இனி அவர் மட்டில் அவர்களுடைய திட்டம் என்ன என்பதை அறிந்தே தீர்வது என்று உறுதியும் பூண்டிருந்தேன். காவல் அதிகாரிகளுடன் முதல் தடவையாக நேர்நேராக மோதுவதற்காக, இப்போது தான் போய்க் கொண்டிருந்தேன். எனக்குள்ளே ஒரே கொதி. பாலாவை அவர்கள் கடத்திக் கொண்டு போய், தொடர்புகொள்ள விடாது அவரை ஒளித்து வைத்திருப்பது ஓர் அத்துமீறலாகப்பட்டது. சட்டக் கடமையில் இருந்து அவர்கள் தவறிவிட்டார்கள் என்ற உணர்வே எனக்குள் பொங்கி நின்றது. ஒரு மனோதர்ம ஒழுக்க பலத்தை அது எனக்குத் தந்தது. பாலாவைப் பற்றி நான் முதலில் விசாரிக்கத் தொடங்கியபோது, பதிலாக மௌனமே எனக்குக் கிடைத்தது. நான் யாரைப் பற்றிப் பேசுகின்றேன் என்பது காவல் துறை அதிகாரிகளுக்கு நன்கு தெரியும். ஆனாலும், பாலாவைப் பற்றி நான் விசாரித்ததும், என்ன நடந்தது என்றோ அவர் எங்கே என்றோ தமக்கு எதுவும் தெரியாது என்றே எல்லோரும் சாதித்தார்கள். அவரிடம் கேள், இவரிடம் கேள் என்று தட்டிக் கழித்த வண்ணம் அலைத்தார்கள். என்னுடைய நல்ல காலம், தமிழ்நாடு காவல் துறையின் புலனாய்வுப் பிரிவின் தலைவரை எனக்குத் தெரியும். முதலமைச்சர் எம்.ஜீ.இராமச்சந்திரனுக்காக அவர் அரசை எவ்வாறு நடத்திக் கொண்டிருந்தார் என்பதும் எனக்குத் தெரியும். ஆகவே, எமக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது அவருக்கு நிச்சயம் தெரிந்திருக்க வேண்டும். எனவே, எனக்குத் தெரிந்த ஒரு காவல் துறை அதிகாரியை அங்கே கண்டதும், அவரை மடக்கினேன். மேல்மாடி அலுவலகத்தில் இருக்கும் பெரியவரிடம்சென்று பாலாவுக்கு ஏதாவது இசகு பிசகாக நடந்தால் அவரையே பொறுப்பாளியாக நான் குற்றம் சுமத்துவேன் என்றும், இது தொடர்பாக, செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்ட எண்ணியிருக்கிறேன் என்றும் அவரிடம் தெரிவிக்குமாறு, நிர்தாட்சண்யமாகக் கூறினேன். எனது மிரட்டல் எப்படியாவது தனது வேலையைச் செய்யும் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. நான் கூறிய ஏதோ ஒன்று அவர்களை மிரள வைத்திருக்க வேண்டும். மேலே சென்ற அந்த அதிகாரி, தமது உயர் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து விட்டு கீழே வந்தார். காவல் துறைக் காவலிலே பாலா இருக்கிறார் எனக் கூறினார். ஆயினும், அவரை விடுதலை செய்ய முடியாது என்றார்; பாலாவுக்கு நான் இன்சுலின் கொண்டு போகலாம் என்றும், அவ்வாறு செல்லும் பட்சத்தில் பாலா வெளியேற்றப்படும் வரை நானும் காவலில் இருக்கவேண்டும் என்றும் அவர் நிபந்தனை விதித்தார். இதற்கு நான் உடனே இணங்கினேன்.

இந்தச் சம்பவத்தில் இருந்து ஒன்றை மனப் பூர்வமாக உணர்ந்தேன். காவல் நிலையங்களில் அல்லது இராணுவ முகாம்களில் காணமற்போகும் உறவுகளைத் தேடி அங்கே போகின்றவர்களுக்கு எங்கே திரும்பினாலும் மௌனமே விடையாக எதிர்கொள்ளும்போது, பெருந்தொகையான அந்த சாதாரண மக்கள் படும் துயரம், அச்சம், ஆற்றாமை ஆகியவை எவ்வளவு ஆழமானவை என்பதை எனது அன்றைய அனுபவத்தின் அடிப்படையில் புரிந்து கொண்டுள்ளேன். சிறிலங்காவில் இத்தகைய சம்பவங்கள் எத்தனையோ இடம்பெற்றிருக்கின்றன அல்லவா?

தயாராக நின்ற காவல் துறைச் சிற்றுந்து ஒன்றினுள் உடனடியாகத் தாவினேன். அது எமது வீட்டுக்குச் சென்றது. பாலாவின் இன்சுலினையும் ஒன்றிரண்டு துணிமணிகளையும் நான் திரட்டியதும், பாலா காவலில் இடப்பட்டிருந்த இடத்துக்கு என்னைக் கொண்டுபோனார்கள். அவருடைய சிறைக் கூண்டு என்று நான் நினைத்திருந்தது ஒரு புதிய இரண்டடுக்கு மாடியில் ஓர் அறையாகும். எனக்கு இது வியப்பாக இருந்தது. சென்னைப் புறநகரில் ஒதுக்குப்புறமாக அந்த வீடு இருந்தது. சிறை இல்லாத சாதாரண வீடு ஒன்றிலே அவரை ஏன் சிறை வைத்திருக்கவேண்டும் என்பது அப்போது எனக்குப் புதிராக இருந்தது. ஆனால், சட்டத்துக்குப் புறம்பான விசாரணைக்காக, அநாமதேய வீடுகளை, புலனாய்வு மற்றும் காவல் துறையினர் அடிக்கடி பயன்படுத்துகிறார்கள் என்பதை அனுபவம் எனக்குக் கற்பித்திருக்கிறது. வீட்டை நாம் நெருங்கும் போது, அந்தக் கட்டடத்தையும் அந்தப் பகுதியையும் நூற்றுக் கணக்கான காவலர்கள் காவல் புரிகின்றமை எனக்கு மலைப்பாக இருந்தது. வீட்டுக்கு உள்ளே கூட, எங்கே பார்த்தாலும் காவல் துறையினர். மேல்மாடி அறை ஒன்றிலே பாலா தனியாக இருந்தார். அவர் கவலையுடனோ மனச் சஞ்சலத்துடனோ அங்கு காணப்படவில்லை. என்னைக்கண்டதில் அவருக்கு மகிழ்ச்சி. ஆனால், தம்மிடம் இன்சுலின் இல்லையே என்ற கவலை மட்டுமே இருந்தது. அவர் சிறிது கூடத் துன்புறுத்தப்படவில்லை. உண்மையில் நிலைமை நேர்மாறாக இருந்தது. அவருடைய நண்பரான காவல்துறை அதிகாரி ஜம்போகுமார், அவரை மிகவும் நன்றாகக் கவனித்துக் கொண்டிருந்தார். விடுதலைப் புலிகள் வீட்டை முற்றுகையிட்டு பாலாவை மீட்டுக் கொண்டு போய்விடுவார்களோ என்ற அச்சத்தில் பாதுகாப்பு நடவடிக்கையாகவே பலத்த பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்று பேசும்போது அவர் கூறினார்.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



பெருந்தலைவர்கள் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜீ.ஜீ பொன்னம்பலம் ஆகியவர்களுடைய கட்சிகளாகிய தமிழரசு கட்சியும் அகில இலங்கை தமிழ் காங்கி ரஸ் கட்சியும் இணைந்து 1972ம்ஆண்டு மே மாதம் 14ஆம் திகதி தமிழர் ஐக்கிய முன்னணியாக உருவாகி, பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம் பெற்றது. அக்கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களில் சம்பந்தன் சூசைதாசன் ஆகியோரும் நானும் மட்டும் எஞ்சியிருக்கின்றோம். 2004ஆம் ஆண்டு வரைக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதித்துவம் போல் செயற்பட்டு வந்தது. இக்கட்டத்தில் பல்வேறு ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனித்துவத்துக்கு இடையூறாக அமைந்தது. எத்தனையோ அசம்பாவிதங்களால் அரசியலில் பெரும் குழப்ப நிலைமை ஏற்பட்டிருந்தது.

அக்கட்டத்தில் தமிழ் அமைப்புக்களான தமிழர் மறுமலர்ச்சிக் கழகம் உட்பட சிவில் சமூகத்தினர். கல்விமான்கள், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைகழக மாணவர் இயக்கங்கள் போன்றவை ஒன்று சேர்ந்து, இரண்டு ஆண்டுகள் முயற்சித்து சகல அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து, ஒரே கொள்கை, ஒரே சின்னமான ''உதயசூரியன்'' சின்னத்தில் 2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் போட்டியிட மேற்கொண்ட முயற்சி, யுத்தம் முடிவுக்கு வரும் வாய்ப்பை உருவாக்கியது என்பதையும், பலரும் மேற்கொண்ட முயற்சியால் எமது கட்சிகளுக்குள்ளும் பல்வேறு அமைப்புகளுக்குள்ளும் காணப்பட்ட வேற்றுமைகள் மறக்கப்பட வேண்டுமென்ற மன நெகிழ்வுடன் விடுக்கப்பட்ட கோரிக்கைகள், மிக்க ஆர்வத்துடன் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதை நீங்கள் அறியமாட்டீர்களா?

இதனை விடுதலைப்புலிகள் விரும்பியமை மட்டுமல்ல, விருப்பத்தையும் தெரிவித்து முழு ஒத்துழைப்பையும் வழங்கினர். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி கூட பொதுச்சின்னம் பற்றித் தாமதித்தாலும் கடைசி நேரத்தில் ''உதய சூரியன்'' சின்னத்தில் தேர்தலில் போட்டியிட சம்மதிக்க வைக்கப்பட்டது என்பதுதானே உண்மை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பொதுச் சின்னம், பொதுக்கொள்கை ஆகியவற்றின் கீழ் தேர்தலில் போட்டியிட வேண்டுமென்பது தமிழ்த் தேசிய குழுக்களின் மிகப்பெரும் விருப்பமாகும். 2004ஆம் ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி ஓர் ஆங்கில பத்திரிகையில் வெளியாகிய தனது கட்டுரையில் தராக்கி இதனை வெளிப்படுத்தியுள்ளார். மேலும், அவர் கடந்த திங்கட்கிழமை அதாவது இரண்டு நாள்களுக்கு முன்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை கிளைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏகமனதான தீர்மானம் அதனை வலுவான உணர்வுபூர்வமாக பிரதிபலித்தது. இதுதான் விடுதலைப்புலிகளின் விருப்பம் எனவும் தெரிவித்து, இந்த விடயத்தில் கிளிநொச்சி மௌனம் சாதித்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தராக்கியின் கூற்றுப்படி இந்த ஆலோசனையை, நீங்களே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிளை தலைவர் என்ற அடிப்படையில் இதனை அனுமதித்திருப்பீர்கள். கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட இந்த முன்பின் யோசனையில்லாத இந்த முடிவுக்கு யார் யார் பொறுப்பாளிகள் என்பது உங்களுக்குத் தெரியாமல் இருக்க முடியாது. இதுவே இறுதி யுத்தத்தின் போது நாடு எதிர்நோக்க வேண்டிவந்த பெரும் அனர்த்தத்துக்குக் காரணமாக அமைந்தது. 2004ஆம் ஆண்டு யுத்தம் முடிந்திருக்க வேண்டும், அல்லது குறைந்தபட்சம் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தற்காலிகமாகவேனும் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 2009ஆம் ஆண்டு மே மாதம் வரை ஐந்து ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்டதால் பெருந்தொகையான உயிரழிவுகளும் சொத்தழிவுகளும் ஏற்பட்டன. தமது சுயநலத்துக்காக பேராசை கொண்ட ஒரு சிலர் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற பெரும் அனர்த்தத்துக்குப் பொறுப்பாளியாவர். அவர்களின் முட்டாள்தனமான செயலால் இத்தகைய பெரும் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது பற்றித் தெரிந்தும் அவர்கள் தமது பதவியை தக்க வைத்துக் கொள்வதிலேயே மிகவும் கவனமாக இருந்திருக்கிறார்கள் என்பதே எனது கணிப்பாகும்.

2001ஆம் ஆண்டு ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் வடக்கு கிழக்கில் ஆர் வமுடன் செயற்படும் குழுக்கள், தமிழ் கட்சிகள், அமைப்புக்கள் ஆகியன தங்களுக்கிடையே காணப்படும் ஆழமான வேறுபாடுகளை

> 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தற்காலிகமாக வேனும் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 2009ஆம் ஆண்டு மே மாதம் வரை ஐந்து ஆண்டுகள் இழுத்தடிக்கப்பட்டதால் பெருந்தொகையான உயிரழிவுகளும் சொத்தழிவுகளும் ஏற்பட்டன. தமது சுயநலத்துக்காக பேராசை கொண்ட ஒரு சிலர் இறுதி கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற பெரும் அனர்த்தத்துக்குப் பொறுப்பாளியாவர். அவர்களின் முட்டாள்தனமான செயலால் இத்தகைய பெரும் அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.



# 2004 இல் சிதைக்கப்பட்ட ஒற்றுமையே

## 2009 இல் பேரழிவைத் தந்தது



மறந்து நீண்டகாலம் இராணுவத்துடன் தொடர்புகள் கொண்டிருந்தமையையும், உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்களையும் பொருட்படுத்தாது ஒரே குடையின் கீழ் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட இருந்தார்கள் என்பதை நீங்கள் அறியாமல் இருந்தது பெரும் ஆச்சரியத்தை தருகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் எனக்கூறிக்கொள்ளும் ஒருவர் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய இயக்கங்கள் கூட்டமைப்பில் சேர்வதை விடுதலைப் புலிகள் அங்கீகரிக்க மாட்டார்கள் என்ற கூற்றுக்கு, கிழக்கு மாகாண விடுதலைப்புலிகளின் தலைவர்களில் ஒருவரான கரிகாலன் இதனை பின்வருமாறு தெளிவுபடுத்தினார். ''ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்புக்களை கூட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்படுவதில் விடுதலைப் புலிகளுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லையெனவும் மிகவிரைவில் அவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறியுள்ளார். அத்துடன்,இந்த அமைப்புக்கள் தமிழ் தேசிய குடையின் கீழ் விரைவாக கொண்டுவரப்பட வேண்டும் என்றார். மேலும் புளொட் இந்த அமைப்பில் இணைத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதிலும் ஆர்வம் காட்டினார். இந்த நேரத்தில்தான் புளொட், ஈ.பி. ஆர்.எல்.எவ், ரெலோ ஆகிய அமைப்புக்கள் உத்தியோகபூர்வமாக இலங்கை இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டவர்கள் என்பது மட்டுமல்ல இராணுவத்தின் உளவு துறையிலும், வடக்கு கிழக்கில் நடைபெற்ற இராணுவத்துடனான கூட்டு எதிர் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருந்தவர்களாவர்.

2004ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் ஐக் கியத்துடன் ஒரே அமைப்பாகச் செயற்பட வேண்டும் என்ற விடுதலைப் புலிகள் விருப்பத்தில் எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை. விடுதலைப் புலிகள் மட்டுமல்ல, அனைத்து தமிழ் குழுக்களும் அவ்வாறே விரும்பியிருந்தன. நிச்சயமாக இந்த அபிப்பிராயத்தில் மாற்றுக் கருத்து இருக்கவில்லை.

சம்பந்தன் அவர்களே, இந்த விடயத்தில் நான் ஒளித்து விளையாட விரும்பவில்லை. சில குறிப்பிடத்தக்க மறக்க முடியாத விடயங்களை இவ்விடத்தில் நினைவூட்ட விரும்புகின்றேன். ஒரு நாள் பாராளுமன்றத்தில் எனக்கு அருகில் நீங்கள் அமர்ந்திருந்தவேளை, இந்திய நீதித்துறை, தம்பி பிரபாகரனுக்கு 200 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்தபோது, யசீர் அரபாத் போன்று விரைவில் பிரபாகரனும் உலகை சுற்றிவரும் காலம் வெகு தொலைவில் இல்லையென கூறியிருந்தேன்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அப்போதும் நீங்கள் அங்கு இருந்தீர்கள். பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவைச் சுட்டிக்காட்டிப் பத்து ஆண்டுகள் சென்றாலும் உங்களால் பளையை கைப்பற்ற முடியாதென்றும், ஆனையிறவை பிடிப்பது வெறும் பகற்கனவு என்றும் அவருக்கு கூறினேன். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் அதே பிரதி பாதுகாப்பு அமைச்சரைப் பார்த்து, ஆனையிறவில் உள்ள இராணுவத்தினரின் உயிரைப் பாதுகாத்து தாருங்கள் என்று உலக நாடுகளைக் கேட்கின்ற சந்தர்ப்பம் இன்னுமொரு தடவை வராது என்று நினைக்காதீர்கள் என்றும் குறிப்பிட்டிருந்தேன். இவ்வாறு புலிகளைப் பாதுகாத்து பல சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருக்கின்றேன். ஒரு சந்தர்ப்பத்தில் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசி அவர்கள், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களை கொழும்பில் சந்தித்தபோது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அ.விநாயகமூர்த்தி இலங்கை இராணுவத்தை முன்பிருந்த இடத்துக்கு நகருமாறு செய்யுங்கள் என்று கேட்டபோது நான் தலையிட்டு அப்படியானால் அவர்கள் ஆனையிறவை கேட்பார்கள் கொடுக்க முடியுமா என அவரிடம் கேட்டேன்.

சம்பந்தன் அவர்களே, இதுதான் நான் கூறிய வார்த்தைகள். ஆனால் நான் ஆனையிறவை அரச படைகளுக்குத் திருப்பி கொடுக்க வேண்டுமென கூறினேன் என்று ஒரு பொய்யான கட்டுக்கதையை வைத்து எனக்கெதிராக ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர முயற்சித்தீர்கள். பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு நான் கேட்டேன் என சத்தியம் செய்யுமாறு கேட்டபோதும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதுவும் கூறாது நழுவி வந்தீர்கள். பல தமிழ்க் குழுக்கள், தமிழ் அரசியல் கட்சிகளை இணைத்து ஒரே குடையின் கீழ் கொண்டுவர முயற்சி நடந்துகொண்டிருந்தவேளையில்தான் எனக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர முயற்சித்தீர்கள். பல மாதங்களாக இத்தீர்மானத்தை நிறைவேற்ற மாவை சேனாதிராஜாவுடன் இணைந்து அலைந்தீர்கள். 30 ஆண்டுகாலமாக செயலிழந்திருந்த, ஸ்தாபகர் இறந்து 28 ஆண்டுகளின் பின் தமிழரசுக் கட்சியை மீள்புனரமைக்க தூண்டிவிட்டீர்கள்.

(13 ஆம் பக்கம் பார்க்க)

## குடி தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்துக்கு கட்டைக்காட்டில் நடப்பட்டது அடிக்கல்



புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கட்டைக்காடு கிராமத்தில், குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கட்டைக்காடு அமைப்பாளர் என்டன் மார்சியஸ் தலைமையில், கடந்தசெவ்வாய்க்கிழமை இந்த நிகழ்வு நடைபெற்றது.

சுத்தமானகுடிதண்ணீரின்றி பல்வேறு நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகி வரும் அந்தப்பிரதேச மக்களுக்கு, குடிதண்ணீர் இயந்திரத்தின் மூலம் சுத்தமான நீரை தடையின்றி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், புத்தளம் மாவட்ட பங்குத் தந்தை மற்றும் புத்தளம் மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் விக்டர் என்டனி பெரேரா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பெற்றோலிய கூ.தாபன ஊழியர்களின் பிள்ளைகளுக்கு வேலைவாய்ப்பு!

## கனிய வள அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 21

பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று கனிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரண துங்க தெரிவித்துள்ளார்.

2016-2017 ஆண்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான பெற்றோலிய கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றுபவர்களின் பிள்ளைகளுக்கு புலமை பரிசில் வழங்கும் நிகழ் விலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வேலைவாய்ப்புகள் வழங்குவது தொடர்பாக பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தில் கடமை புரியும் பெற்றோர்களின் சேவைக் காலம் கருத்தில் கொள்ளப்படும்.

இதனால் அவர்களின் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு பெற்றுத்தரப் படும்.

இதுதொடர்பாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சட்டப்பிரிவு புதிய சட்டவரைவு ஒன்றைத் தயாரித்து, எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தவுள்ளது.

பல்கலைக்கழகத் தெரிவுஒருபக்கம்திறமையும் மறுபக்கம் அதிஷ்டத்தையும் கொண்டது. ஆனால் தற்போது பல்கலைக் கழகத்தில் 8,9 ஆண்டுகள் இருந்து சில மாணவர்கள் காலத்தை வீணாக்குகின் றனர்.

மாணவர்கள் தமது கல்வி உரிமையைப் பெற்றுக்கொள்ள பல வேறுவழிகள் உள்ளன. -என்றார்.

இந்தநிகழ்வில் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, அமைச்சின் செயலாளர் உபாலி மாரசிங்க மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் தம்மிக ரணதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.(எ)

# வெளியிட்டு வைக்கப்பட்டது 'கந்தபுராண வசனம்' நூல்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் படைத்தருளிய 'கந்தபுராண வசனம்' எனும் நூல் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் நேற்று முன்தினம் காலை வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்துசமய அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமி நாதன் நூலை வெளியிட்டு வைத்தார்.

சமஸ்கிருதத்திலிருந்து கச்சியப்ப சிவாச்சாரியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட



கந்தபுராணத்துக்கான எளிமையான உரையாக ஆறுமுகநாவலரால் எழுதப்பட்ட 'கந்தபுராண வசனம்' அமைந்துள்ளது. அவருக்குப் பின்னர் ஆறுமுக நாவலர் சபை 1981 ஆம் ஆண்டில் அந்த நூலை பதிப்பித்திருந்தது.

அதனைத் தொடர்ந்து 35ஆண்டுகளின்பின்னர் சைவப்பிரகாச பதிப்பகத்தின் முயற்சியால் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இந்த நூல் பதிப்பித்து நேற்று முன்தினம் வெளியிடப் பட்டுள்ளது.

நிகழ்வில், சின்மய மிஷன் சைதன்ய சுவாமிகள், நல்லூர் ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன் உட்பட சமயப் பெரியார்கள் பலரும் கலந்து கொண்டனர். (எ)

## 2004 இல் சிதைக்கப்பட்ட...

(12 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

எஸ்.ஜே.வி.செல்வநாயகம் கியு.சி அவர்கள் இறக்கும் போது தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவராகவே இறந்தார். எல்லா தமிழ்க்குழுக்களும் ஒன்று சேர்ந்து பல்வேறு கட்சிகளை ஒன்றிணைக்க முயற்சித்துக்கொண்டிருந்த வேளையில் மாவை சேனாதிராசா தங்களின் கட்டளைக்கிணங்க எவருடைய அனுமதியுமின்றி தமிழரசு கட்சியை மீள்புனரமைப்புச் செய்வதில் ஆர்வமாக செயற்பட்டிருந்தார். இது சம்பந்தமாக பல பக்கங்கள் எழுத முடியும். ஆனால் சுருங்கக்கூறின், தற்போதேனும் தயவுசெய்து தங்களுடைய மோசமான செயல்களை கைவிட்டு, மாவை சேனாதிராசாவுடன் இணைந்து 2004ஆம் ஆண்டுக்கு பின்னரும் யுத்தம் தொடர்வதற்குக் காரணமாக இருந்ததை ஒத்துக்கொள்ளுங்கள்.

2004ஆம் ஆண்டு தொடர்ந்த ஐந்து ஆண்டுகளும் நாம் சந்தித்தவை மரணங்களும், அழிவுகளுமே. நீங்களும் மாவை சேனாதிராசாவும் ஏதாவது சாதித்ததாக உரிமை கோரினால், ஒரு சுதந்திரத்துக்காக போராடிய அமைப்பையும் அதன் தலைவர்களையும் அழிக்க உதவியது மாத்திரமே. நீங்கள் எந்த சந்தர்ப்பத்திலும், தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமைக்காகச் செயற்பட்ட அந்தக் குழுக்களின் நடவடிக்கைகள் பற்றி எதுவும் தெரியாதென கூறமுடியாது. அதற்கு முரணாக நீங்கள் பல்வேறு அமைப்புக்கள் மத்தியில் ஒற்றுமையின்மையை வளர்த்து வடக்கு கிழக்கில் பெரும் அழிவுகளுக்கு காரணமாக இருந்துள்ளீர்கள்.

எவரையும் கேளாது தமிழரசுக் கட்சியை புதுப்பித்து, அதன் வீட்டுச்சின்னத்தில் 2004ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு யுத்தத்தை மேலும் ஐந்து ஆண்டுகள் நீடிக்க வழிவகுத்து பெரும் உயிர்கள், சொத்தழிவுகளுக்கு காரணமாக இருந்துள்ளீர்கள்.

2004ஆம் ஆண்டு சகல அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு ஒரே குடையின் கீழ், ஒரே கொள்கை, ஒரே சின்னமாகிய உதயசூரியன் கீழ் செயற்பட்டிருந்தால் விடுதலைப் புலிகள் இராணுவ நடவடிக்கைகளை கைவிட்டிருப்பார்கள். இது நடந்திருந்தால் சகல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களும் ஜனநாயக நெறிமுறையில் தேர்தலில் வெற்றியடைந்திருப்பார்கள்.

அரசுடன் பேச்சு நடத்துவதற்கேற்ப ஒரேயொரு தமிழ்க் குழு ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டிருக்கும். ஒன்றில் யுத்தம் முடிவுக்கு வந்திருக்கும் அன்றேல் ஏப்ரல் மாதம் 2004ஆம் ஆண்டு தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டவுடன் தற்காலிகமாகவேனும் யுத்தம் நிறைவுக்கு வந்திருக்கும்.

நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய இன்னுமொரு விடயம் யாதெனில் பல பத்தாயிரக்கணக்கான அப்பாவி மக்கள், விடுதலைப்புலிகளின் போராளிகள், அவர்களின் தலைவர்கள், பல கோடி ரூபா பெறுமதிமிக்க சொத்துக்கள் அழிவுகளிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கும். எல்லாவற்றுக்கு மேலாக விடுதலைப்புலிகள் போராளிகள் சுதந்திரமாக நாட்டுக்குள் புகுந்து தமக்கேற்ற ஜனநாயக பணிகளில் ஈடுபட்டிருந்திருப்பார்கள். துரதிஷ்டவசமாக சிலருடைய முட்டாள்தனமான தீர்மானத்தால் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்த தமிழ்ச் சமூகம் அனுபவித்த பெரும் துயரங்களிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்திருக்கும். முப்பது வருடங்களாக மக்கள் செய்த பெரும் தியாகங்களும், துயரங்களும் கணக்கிலடங்கா.

வீ.ஆனந்தசங்கரி
செயலாளர் நாயகம் - த.வி.கூ.

# பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே பூநகரிக்கான குடிதண்ணீர் விநியோகம்

## பிரதேச சபைச் செயலாளர் கருத்து

பூநகரிப் பிரதேச மக்களுக்கான குடி தண்ணீர் வழங்குவதில் பல்வேறு சவால்களைத் தாங்கள் எதிர்கொள்கின்றார்கள் என்று பூநகரி பிரதேசசபையின் செயலாளர் இராஜ கோபால் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிளிநொச்சி மாவட்டத்தில் குடிதண்ணீர் நெருக்கடியைஎதிர்கொள்ளும் பகுதியாக பூநகரிப் பிரதேசம் காணப்படுகின்றது.

19 கிராம அலுவலர் பிரி வுகளைக் கொண்ட பூநகரிப் பிரதேசத்தில் 7 ஆயிரத்து 434 குடும்பங்களைச் சேர் ந்த 25 ஆயிரத்து 891 பேர் இது வரை மீள்குடியேறி வாழ்ந்து வருகின்றனர்.

இதில் பத்துக்கும் மேற்பட்ட கிராம அலுவலர்பிரிவுகளுக்கு வருடம் முழுவதும் குடிதண்ணீர் விநியோகம்மேற்கொள்ள வேண்டிய நிலை காணப் படுகின்றது.

கறுக்காய்த்தீவு, செட்டிய குறிச்சி, ஞானிமடம், சித்தங்குறிச்சி, மறவன் குறிச்சி, கொல்லக்குறிச்சி, இராமலிங்கம் வீதி, செம் மண்குளம், வலைப்பாடு, ஜெய புரம், பரமன்கிராய், உள்ளிட்டபகுதிகளுக்கும் குடிதண்ணீர்விநியோகம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நாளொன்றுக்கு இருபதாயிரம், லீற்றருக்கு மேற்பட்ட தண்ணீரைப் பெற்று விநியோகிக்க வேண்டிய தேவையுள்ளது.

ஆனால், போதிய ஆளணி மற்றும் பௌதிக வளப்பற்றாக் குறைகள் காணப்படுகின்றன.

இதனைவிட குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளும் பகுதிகளுக்கான வீதிகள் மோசமாகச் சேதமடைந்து காணப்படுகின்றன. அத்துடன், குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்கின்றகிணறுகளில் போதியளவு நீரைப்பெற முடியாதுள்ளது.

இதேவேளை, தற்போது அனர்த்தமுகாமைத்துவ செயலகம் ஊடாகக் குறிப்பிட்ட பகுதிகளுக்கு குடிதண்ணீர்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.-என்றார். (எ)

## வீரகத்தி விநாயகர் மலர் வெளியீடு

யாழ்ப்பாணம்கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் கும்பாபிஷேக மலர் 'வீரகத்தி விநாயகர்' வெளியீட்டு விழா நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிள்ளை யார் கோயில் மண்டபத்தில் இடம்பெறும். (எ)

## கடலக மாலுமி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகத்தில் இந்த வருட இரண்டாம் கல்வியாண்டில் புதிய தொழிற்கற்கை நெறிகளாக கடல்மாலுமி பயிற்சிநெறி (என்.வி.கியூ 4) மற்றும் உயிர் பாதுகாப்பு பயிற்சி நெறி (என்.வி.கியூ 4) என்பன ஆரம்பிக்கப்படவுள்ளன.

படகைச்செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு கடலக மாலுமி பயிற்சி நெறி மிகவும் பயனுள்ளதாக அமையும். ஜி.சீ.ஈ. சாதாரண தரம் தோற்றியவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரியின் பொருத்தமான நேர காலங்களுக்கு ஏற்ப கற்கை நெறிகள் யாவும் ஒழுங்கு செய்து தரப்படும். மேலும் உள் நாடு மற்றும் வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய கற்கை நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. அனைத்து கற்கை நெறிகளும்கட்டணம்இன்றி நடத்தப்படும். அவற்றைக் கற்ற விரும்புபவர்கள் உரிய விண்ணப்பப் படிவங்களை பல்கலைக்கழக அலுவலக நேரத்தில் பெற்று எதிர் வரும் 28 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க முடியும் என்று இலங்கை சமுத்திர பல்கலைக்கழக உதவிப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணலிங்கம் தெரிவித்துள்ளார்.

# சிம்லாவில் பஸ் கவிழ்ந்து விபத்து: 28 பேர் பரிதாபமாக உயிரிழப்பு!



சிம்லா, ஜூலை 21

இமாலயப்பிரதேச மாநிலத்தின் சிம்லா பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை பள்ளத்தாக்கில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 28 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 9 பேர் படுகாயம் அடைந்தனர்.

இமாலயப் பிரதேசக் கின்னார்பகுதியிலிருந்து சோலன் பகுதியை நோக்கிச்சென்றுகொண்டிருந்த பஸ்ஸே விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப் படுகிறது.

பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்தமையே விபத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

படுகாயம் அடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சசியைச் சந்திக்க தினகரனுக்கு அனுமதி மறுப்பு!

பெங்களூர் சிறையில் உள்ள சசிகலாவைச் சந்திக்கச் சென்ற தினகரனுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அவர் தாமதமாக வந்தார் எனக் கூறியே சிறைக் காவலர்கள் சசிகலாவைச் சந்திக்க மறுப்புத் தெரிவித்தனர்.

இதனால் , பெங்களூர்பரப்பன அக்ரஹாரா சிறைக் காவலர்களுடன் டி.டி.வி. தினகரன் வாக்குவாதத்தில் ஈடுப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## காந்தியை காப்பாற்றிய தியாகி பிகு தஜி காலமானார்!



மகாத்மா காந்தியை கோட்சேயின் கத்தி முனையில் இருந்து காப்பாற்றிய தியாகி பிகு தஜி பிலாரே, நேற்று முன்தினம் புதன்கிழமை தனது 98 வயதில் உயிரிழந்துள்ளார்.

மகாத்மா காந்தி 1948 ஆம் ஆண்டு நாதுராம் கோட்சேயால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு முன்னர் 1944 ஆம் ஆண்டு மராட்டிய மாநிலம் பாஞ்ச் கனி என்ற இடத்தில் காந்தி தனது உதவியாளர்களுடன்கலந்து கொண்டிருந்தார். அப்போது, காந்தியைக் கொல்வதற்காக கோட்சே கையில் கத்தியுடன் வேகமாக வந்தார்.

இதனைப் பார்த்த காந்தியின் ஆதரவாளரான பிகு தஜி பிலாரே, உடனே பாய்ந்து சென்று கோட்சேயை தடுத்தார். கையை முறுக்கி கையில் இருந்த கத்தியைப் பறித்தார்.

ஆனால், காந்தி 'கோட் சேயை விட்டு விடுங்கள் போகட்டும்' என்று கூறி விட்டார்.

அப்போது காந்தியைக் காப்பாற்றிய பிலாரே, அவரைப் பின்பற்றி தொடர்ந்து பல சுதந்திர போராட்டங்களில் கலந்து கொண்டார்.

சுதந்திரத்துக்குப் பின்பு அவர் மராட்டிய சட்டசபையில் ஜவாலி தொகுதி எம்.எல்.ஏவாக 18 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

# இந்திய ஜனாதிபதித் தேர்தலில் ராம்நாத் கோவிந்த் வெற்றி!

## 14 ஆவது குடியரசு தலைவராகத் தேர்வு



டில்லி, ஜூலை 21

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் பா.ஜ.க. வேட்பாளர் ராம்நாத் கோவிந்த் வெற்றிபெற்றுள்ளார். இவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட மீரா குமாரை விட 4 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றுள்ளார். இதன்மூலம் அவர்இந்தியாவின் 14 ஆவது குடியரசுத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

உலகிலேயே மிக பெரிய ஜன நாயக நாடான இந்தியாவுக்குப் புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. பா. ஜ.க. கூட்டணி சார்பில் ராம்நாத் கோவிந்தும், எதிர்க் கட்சிகள் சார்பில் முன்னாள் சபாநாயகர் மீராகுமா!' அம்மையாரும் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட்டனர். இருவரும் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, எம்.பிக்கள் மற்றும் எம்.எல். ஏக்களைச் சந்தித்து ஆதரவு திரட்டினர்.

நாடாளுமன்றத்தில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடியில் எம்.பிக்களும், மாநில சட்டசபைகளில் அமைக்கப்பட்டிருந்த வாக்குச்சாவடிகளில் அந்தந்த மாநில எம்.எல்.ஏக்களும் வாக்களித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் 99 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன. வாக்குப்பதிவு முடிந்ததை அடுத்து, மாநிலத் தலைநகரங்களில் இருந்து வாக்குப் பெட்டிகள் டில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்தநிலையில், டில்லி நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை காலை 11 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. மொத்தமுள்ள 4 மேசைகளில் 8 சுற்றுகளாக வாக்குஎண்ணிக்கைநடைபெற்றது. முதலில், நாடாளுமன்ற வாக்குச்சாவடியில் பதிவான வாக்குகளும், அதன்பிறகு அகர வரிசைப்படி, மாநிலங்களில் பதிவானவாக்குகளும்எண்ணப் பட்டன.

இந்த நிலையில், வாக்கு எண்ணிக்கையின் தொடக்கம் முதலே பா.ஜ.க. வேட்பாளர் ராம்நாத் கோவிந்த் முன்னிலையில் இருந்தார். வாக்கு எண்ணிக்கை நிறைவடைந்தபோது, ராம்நாத் கோவிந்த் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ராம்நாத் கோவிந்துக்கு 7 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளும், மீராகுமாருக்கு 3 லட்சம் வாக்குகளும் கிடைத்தன.

இதை அடுத்து, இந்தியாவின் குடியரசுத் தலைவராக ராம்நாத் கோவிந்த் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் எதிர்வரும் 25ஆம்திகதி பதவியேற்க உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றி பெற்ற ராம்நாத் கோவிந்துக்கு பிரதமர் மோடி, பா.ஜ.க. தலைவர் அமித் ஷா ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர்.

# மூளை அறுவை சிகிச்சையின்போது கிற்றார் வாசித்த விசித்திர மனிதர்!

கலைஞர் ஒருவருக்கு மூளை அறுவைச் சிகிச்சை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது, அவர் கிற்றார் வாசித்த சம்பவம் அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பெங்களூரில் உள்ள மேற்படி இசைக்கலைஞர் நரம்பியல் பிரச்சினையால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் இசைக் கருவிகளை வாசிக்கும் போது தனது இடது கை விரல்களை அசைக்க முடியாமல் இருந்தது. இதனால், அவருக்கு மூளையில் அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அதைத் தொடர்ந்து அவருக்குக் கடந்த வாரம் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அப்போது அவருக்கு எந்தப் பகுதியில் பாதிப்பு இருக்கிறது என மருத்துவர்கள் அறியமுற்பட்டனர்.

அப்போது தலையில் அறுவைச் சிகிச்சை செய்வதற்காக படுக்கவைக்கப்பட்ட நிலையில் அவர் கிற்றார் வாசித்துக்காட்டி உள்ளார். அவர் கிற்றார் வாசித்த படங்கள் இணையத்தில் வெளியாகியுள்ளன. இது அனைவரிடமும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.



இது தொடர்பில்மருத்துவர்கள்தெரிவிக்கையில்- ''அவர் இசைக்கருவிகள் வாசிக்கும் போது மூளையின் எந்த இடத்தில் பாதிப்பு இருக்கிறது என்பதை எந்தப் பிரச்சனையும் இல்லாமல் எளிதாக கண்டறிய முயன்றோம். அதன் காரணமாகவே அவர் கிற்றார்வாசித்தார்''-எனத் தெரிவித்துள்ளனர்.

## தலைநகரை ஸ்தம்பிக்க செய்த மழை!

இந்தியத் தலைநகர் டில் லியில் கடும் மழை காரணமாகப் பல பிராந்தியங்களும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

நேற்று வியாழக்கிழமை சில மணித்தியாலங்கள் நீடித்த மழையால் டில்லியை அண்மித்த காலியாபாத் நகர் நீரில் மூழ்கிது. மேலும், மழையால் வீதிப் போக்குவரத்துதடைப்பட்டது. அதனால், பயணிகள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகினர். இந்திய வானிலை ஆய்வுமையத்தின் அறிக்கையின்படி, டில்லியில் நேற்று 25.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

### ஐ.எஸ். தீவிரவாதிகளைக் குறிவைத்து

# சிரியாவில் வான்தாக்குதல்கள்: 30 பொதுமக்கள் உயிரிழப்பு!




டமாஸ்கஸ்,ஜூலை 21

சிரியாவின் ரக்கா நகரில் பதுங்கியுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளைக் குறிவைத்து, அரச படைகள் வான் தாக்குதல்களை நடத்தியுள்ளன. இந்தத் தாக்குதலில் சிக்கி 30 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தினர் உலகமெங்கும் பல்வேறு தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இந்த இயக்கத்தை ஒழிப்பதற்கான பணியில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் கடந்த 5 ஆண்டுகளாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஈராக்கில் ஐ.எஸ். வசமிருந்த பெரும்பாலான நகரங்களை அரச படையினர் மீட்டு விட்டனர். இன்னும், ரக்கா உள்ளிட்ட சில பகுதிகளில் மட்டுமே அவர்கள் பதுங்கியிருந்து தாக்கு தல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், ரக்கா நகரில் இருக்கும்தீவிரவாதிகளைக் குறி வைத்து அரச படையினரின் போர் விமானங்கள் மூலம் வான் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் அந்த நகரத்தைச் சேர்ந்த 15 பொது மக்கள் உயிரிழந்தனர்.

இதேவேளை,அருகில் உள்ள மற்றுமொரு கிராமத்தில் ரஷ்ய போர் விமானங்கள் நடத்திய வான்தாக்குதலில் சிக்கி மேலும், 15 பேர் உயிரிழந்தனர் என லண்டனில் இருந்து செயற்படும் சிரிய போர் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

# அல்குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனை 3 முறை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றேன்!

### அமெ. இராணுவ அதிகாரி தெரிவிப்பு

வொஷிங்டன், ஜூலை 21

அல்குவைதா தலைவர் பின்லேடனை நான் 3 முறை சுட்டுக் கொன்றேன் என அமெரிக்க இராணுவ அதிகாரி ரொபர்ட் ஓ நீல் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த அல்குவைதா தலைவர் ஒசாமா பின்லேடன் 2011 ஆம் ஆண்டு மே மாதம் 2 ஆம் திகதி கொல்லப்பட்டார். ஆனால், இது தொடர்பாக முழுமையான தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.இந்த நிலையில், அந்தத் தாக்குதலில் ஈடுபட்ட இராணுவ அதிகாரி ரொபர்ட் ஓ நீல் என்பவர் இது தொடர்பில் ஒரு புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளார். தனது புத்தகத்தில் எழுதியுள்ள தகவல்கள் தொடர்பாக ரொபர்ட் ஓ நீல் பி.பி.சி. செய்தி நிறுவனத்துக்கு சிறப்பு பேட்டி அளித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

''2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையத் தாக்குதலைத் தொடர்ந்து, இந்தத் தாக்குதலுக்கு 400 பேர் தயார் படுத்தப்பட்டிருந்தோம். சம்பவத்தன்று ஆப்கானிஸ்தானில் இருந்து 2 ஹெலிக்கொப்டர்களில் அனுப்பப்பட்டோம். 90 நிமிட பயணத்தில் அபோதாபாத் சென்றடைந்தோம். பின்லேடன் இருந்த வீட்டின் மொட்டை மாடியில் ஹெலிக்கொப்டர்கள் எங்களைத் தரையிறக்கின. உடனடியாக அதிரடியாக அந்த வீட்டுக்குள் நுழைய முயன்றோம். அங்கிருந்த ஒரு கதவைக் குண்டுவைத்து தகர்க்க முயன்றோம். ஆனால், அது போலிக் கதவு என்று தெரிந்தது. மற்றொரு கதவைத் திறந்து உள்ளே சென்றோம்.

'நாங்கள் நுழைந்தமையைப் பின்லேடன் பார்த்துவிட்டார். உடனே அங்கிருந்த பெண்களையும், குழந்தைகளையும் தன்னுடன் ஒன்றாக நிற்க சொன்னார். அவர் இரு கைகளையும் இடுப்பில் வைத்தபடி நின்று கொண்டிருந்தார். உடனே எனது துப்பாக்கியை எடுத்து அவரை நோக்கி 3 முறை சுட்டேன். அவர் உயிரிழந்தார்.

''இந்தத் தாக்குதல் நடந்தபோது பின்லேடன் முன்புறமாக அவரது மனைவி நின்று கொண்டிருந்தார். இடது பக்கத்தில் மகன் நின்றார். இருவரையும் நான் கைகளால் தள்ளிவிட்ட பின்னர்தான் பின்லேடனைநோக்கிச்சுட்டேன். இந்தநிலையில், பின்லேடன் மகனிடம் நாங்கள் இனி என்ன செய்யட்டும் என்று கேட்டார். அப்போது, பின்லேடன் மகன் எந்தவித அதிர்ச்சியும் இல்லாமல் சிரித்தபடி நின்று கொண்டிருந்தார்.

இதனை அடுத்து, பின்லேடனின் உடலை எடுத்துக்கொண்டு அனைவரும் ஹெலிக்கொப்டரில் ஏறி ஆப்கானிஸ்தானுக்குப் புறப்பட்டோம். இதனை அடுத்து, பின்லேடனின் உடலை இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்தோம்.'' - என்றார். (ச)



### ஸாம்பியாவில் 40,000 வீடுகளை இருளில் மூழ்கடித்த பபூன் குரங்கு!

லுசாகா, ஜூலை 21

கிழக்கு ஆபிரிக்க நாடான ஸாம்பியாவின் விக்டோரியா நீர்வீழ்ச்சிப் பகுதியில் மின்சார சாதனத்தை பபூன் குரங்கு ஒன்று சேதப்படுத்தியமையால், சுமார் 40 ஆயிரம் வீடுகளுக்கு மின்தடை ஏற்பட்டுள்ளது.

விக்டோரியா நீர்வீழ்ச்சிப் பகுதிக்கு அருகில் அமைந்துள்ள தேசிய பூங்கா ஒன்றில் பலவிதமான உயிரினங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக இந்தப் பகுதி அதிக அளவிலான சுற்றுலா பயணிகளைக் கவர்ந்து வருகிறது. இந்தப் பகுதிக்கு லிவிங்ஸ்டோன் பகுதியில் உள்ள 180 மெகா-வோட்ஸ் திறன் கொண்ட நீர்மின் நிலையத்தில் இருந்து மின்சாரம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், பூங்காவில் இருந்து நீர்மின் நிலையத்துக்குள் நுழைந்த பபூன் வகை குரங்கு ஒன்று நீர் மின் நிலையத்தில் உள்ள மின்சார சாதனத்தை தவறுதலாக தொட்டுள்ளது. இதன் காரணமாக குரங்கின் உடலில் மின்சாரம் பாய்ந்தது. அத்துடன், மின்சார சாதனமும் சேதமடைந்தது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்த குரங்கை பூங்கா மருத்துவர்கள் சிகிச்சை அளித்துக் காப்பாற்றினர். (ச)

# மூளை சாவடைந்த பிரேஸில் பெண்ணுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்த அதிசயம்!

பிரேஸிலில் மூளை சாவு அடைந்த இளம்பெண் ஒருவர், இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்து அதிசயம் நிகழ்த்தி இருக்கிறார். இது அவரது உறவினர்கள் மற்றும் அவர் சேர்க்கப்பட்டிருந்த மருத்துவமனையின் திறமை மிக்க மருத்துவர்களால் சாத்தியப்பட்டுள்ளது.

பிரேஸில், கண்டெண்டா பகுதியைச் சேர்ந்த 21 வயதான ஜம்போலி படில்ஹா, 9 வாரக் கர்ப்பமாக இருக்கையில் மூளை சாவு அடைந்து விட்டார் என மருத்துவர்கள் அறிவித்தனர். ஜம்போலி தான் கருவுற்ற 9 ஆவது வாரத்தில், திடீரெனத் தனக்கு கழுத்து மற்றும் தலைப்பகுதியில் தாங்க முடியாத வலி இருக்கிறது எனத் தன் கணவரிடம் கூறவே, அவரது கணவர் முரியல் படில்ஹோ அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்.

ஆனால், அழைத்துச் செல்லும் வழியிலேயே ஜம்போலிக்குநினைவுதப்பிவிட்டது. மருத்துவமனையில் ஜம்போலிக்கு மூளையில் இரத்தக் கசிவு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அதனை உரிய நேரத்தில் கண்டுபிடிக்கத் தவறியமையால் அவர் மூளை சாவு அடைந்து விட்டது என்று தெரிவிக்கப்பட்டது. இதனால், தாய் மூளை சாவு அடைந்தமையால் வயிற்றுக்குள் இருக்கும் குழந்தைகளை மிஞ்சிப் போனால் இன்னும் 3 நாள்களுக்கு மட்டுமே உயிரோடு இருக்கும் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.




ஆனால், வெறும் மூன்று நாள்களில் முடிந்து விடும் என நினைத்த அந்த இரட்டைக் கருக்களின் இதயத் துடிப்பு, 123 நாள்கள் அந்த மருத்துவமனையில் ஆரோக்கியமாக நீடித்தது. இந்த நிலையில், முழு வளர்ச்சி அடைந்த இந்த இரட்டைக் குழந்தைகளை அறுவை சிகிச்சை மூலம் வெளியே எடுத்தனர். அந்த இரு குழந்தைகளையும் தொடர்ந்து மூன்று மாதங்கள் வைத்தியசாலையில் தொடர் கண்காணிப்பில் வைத்திருந்திருந்தனர்.

இது தொடர்பில் ஜம்போலியாவின் தாயார் தெரிவிக்கையில்-

'எனது மகளுடைய மரணம் மிகுந்த துக்கத்தை தருகிறது. இருந்தாலும் அவர் தன் வாழ்வின் இறுதிப் பகுதியை எட்டி விட்ட நொடியிலும் கூட, தன் விதியை எதிர்த்துப் போராடியுள்ளார். அவர் கருவிலிருந்து தனது இரட்டைக் குழந்தைகளுக்கு வாழ்வை மீட்டுத் தந்துள்ளார்'-என்றார்.

# போராட்டத்தின் மத்தியில் சம்பியனானது ஏஞ்சல்




(கங்கா)

யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் நடத்திய இளையோருக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியில், 20 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் மிகுந்த போராட்டத்தை வெளிப்படுத்தி இறுதி வரையில் போராடி, ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்தச் சுற்றுப்போட்டி கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்று வந்தது. சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதியது. முதற்சுற்றை ஏஞ்சல் அணி 18:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவாகக் கைப்பற்றியது. இருந்தும், இரண்டாவது சுற்றில் சுதாகரித்துக் கொண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, 15:14 புள்ளிகளைப் பெற்றது. தொடர்ந்து சிறப்பாக விளையாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 3 ஆவது சுற்றை 15:13 புள்ளிகள் என்ற அடிப்படையில் கைப்பற்றி மீண்டெழுந்தது. தொடர்ந்து இரண்டு சுற்றுக்களை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கைப்பற்றியமையால், ஆட்டம் மிகுந்த சூடு பிடித்தது.

4 ஆவது சுற்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிகூடிய புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்ற வேண்டும் என்ற நிலையில் ஆடியது. எனினும், அதற்கு இடங்கொடுக்காத வகையில் ஏஞ்சல் அணி இறுக்கமாக ஆடியது. 4 ஆவது சுற்றை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 20:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் மாத்திரம் கைப்பற்றியது. இதனால் 1 புள்ளிகள் வித்தியாசத்தில் - 59:58 என்ற கணக்கில் - ஏஞ்சல் அணி சம்பியனாகியது.

ஆட்டத்தின் தொடர் நாயகனாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியின் புஸ்பராஜா தர்மிசன், இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக ஏஞ்சல் சர்வதேச பாடசாலையின் எலியஸ் ஜோனத் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



# வேம்படி சம்பியன்




(கங்கா)

யாழ்மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் நடத்தப்பட்ட இளையோருக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், 15 வயதுப் பிரிவுப் பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரி அணி சம்பியனாகியது.

இந்தச் சுற்றுப்போட்டி கடந்த ஒரு மாதகாலமாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுவந்தது. இதில் 10 அணிகள் பங்குபற்றின. 15 வயதுப் பெண்களுக்கான இறுதிப் போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும், உடுவில் மகளிர் கல்லூரி அணியும் மோதின. இந்தப் போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் 18 ஆம் திகதி இரவு இடம்பெற்றது.

இதில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணி, 35:30 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

இந்தச் சுற்றுப்போட்டியின் தொடர் நாயகியாக அரிச்சந்திரன் மதுரா, இறுதிப் போட்டியின் நாயகியாக குகனேஸ்வரன் திசோதா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிபெற்ற அணிகள், மற்றும் சிறந்த வீர, வீராங்கனைகளுக்கான பரிசில்களை நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட வடமாகாண சபை உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன் வழங்கினார்.

# யாழ்ப்பாணப் பல்கலை. இரண்டாமிடம்



(கங்கா)

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற வீதியோட்ட நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2 ஆம் இடத்தைப் பெற்றது.

இந்தப் போட்டி கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் அண்மையில் நடைபெற்றது. இதில் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் முதலிடம் பெற்றது.

இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும்,மூன்றாம் இடத்தை சப்பிரகமுவா பல்கலைக்கழகமும் பெற்றுக்கொண்டன.

இந்த வீதியோட்டப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் சதீஸ்குமார், சுதர்சன், எட்வின் ஜோசப், எழிலன், ருஜிந்தன், கரன், கோகிலராஜ் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

# இந்திய அணியின் பந்துவீச்சுப் பயிற்றுநராக பரத் அருண் நியமனம்!




டில்லி, ஜூலை 21

இந்திய கிரிக்கெட் அணியின் பந்துவீச்சுப் பயிற்றுநராக பரத் அருண் நியமிக்கப்பட்டுள்ளார்.

தலைமைப் பயிற்றுநர் ரவி சாஸ்திரியின் வேண்டுகோளை ஏற்றுப் பரத் அருணை பந்துவீச்சுப் பயிற்றுநராக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நியமித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுநராக இந்தியாவின் முன்னாள் சகலதுறை வீரர் ரவி சாஸ்திரி கடந்த வாரம் நியமிக்கப்பட்டிருந்தார்.

இதனை அடுத்து, பந்துவீச்சுப் பயிற்றுநராக ஸஹீர் கானும் வெளிநாட்டுத் தொடர்களில் துடுப்பாட்ட ஆலோசகராக ராகுல் ராவிட்டும் நியமிக்கப்பட்டுள்ளனர் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது.

ஆனால் இவர்களது நியமனத்தில் திருப்தியில்லை என ரவி சாஸ்திரி தெரிவித்தமையால் அந்த நியமனங்கள் உடனடியாக மீளப் பெறப்பட்டன.

மேலும், இந்திய அணியின் பணிப்பாளராகத் தான் பதவி வகித்த காலத்தில் பந்துவீச்சுப் பயிற்றுநராகக் கடமையாற்றிய பரத் அருணை பந்துவீச்சுப் பயிற்றுநராக நியமிக்க வேண்டும் என்பதில் ரவி சாஸ்திரி விடாப்பிடியாக இருந்தார்.

இதனை அடுத்து பரத் அருணை பந்துவீச்சுப் பயிற்றுநராகவும் சஞ்சய் பங்காரை துடுப்பாட்டப் பயிற்றுநராகவும், களத் தடுப்புப் பயிற்றுநராக ஸ்ரீதரையும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை நியமித்துள்ளது.

# யாழ். பிரிவு – 3 சுற்றுப் போட்டியில் இறுதி ஆட்டத்தில் யாழ்.பல்கலை

(கங்கா)

இலங்கை துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில், யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் ஒழுங்கமைத்து நடத்துகின்ற பிரிவு - 3 அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி நுழைந்தது.

50 ஓவர்களைக் கொண்ட இந்தச் சுற்றுப்போட்டியின் முதலாவது அரையிறுதிப் போட்டி 15 ஆம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்த அரையிறுதியில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி 38.3 ஓவர்களில் 95 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்களையும் இழந்தது.

பந்துவீச்சில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி சார்பாக செந்தூரன் 3, துவாரகசீலன் 2, ஜனந்தன் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

96 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி 24.1 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் துவாரகசீலன் 45, சானக்க 18 ஓட்டங்களையும்பெற்றுக் கொண்டனர்.

இந்த வெற்றியின் மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றதுடன், பிரிவு -2 க்கான தேசிய மட்டப் போட்டிகளில் விளையாடவும் தகுதி பெற்றுள்ளது.

# டெஸ்ட் தர வரிசையில் 2 ஆம் இடத்தில் ஹேரத்!




டுபாய், ஜூலை 21

ஐ.சி.சி. இன் புதிய டெஸ்ட் தர வரிசைப்படி இரண்டாம் இடத்திலிருந்த இந்திய வலதுகை சுழல் பந்துவீச்சாளரான ரவிச்சந் திரன் அஷ்வினைப் பின்தள்ளி 32 புள்ளிகள் வித்தியாசத்தில் முதலிடத் திலிருக்கும் மற்றுமொரு இந்திய சுழல் பந்துவீச் சாளரான ரவீந்திர ஜடேஜா வுக்கு அடுத்ததாக இரண் டாவது இடத்துக்கு ரங்கன ஹேரத் முன்னேறியுள்ளார்.

கடந்த சில வாரங்களாக நடைபெற்றிருந்த டெஸ்ட் போட்டிகளில் கிரிக்கெட் வீரர்கள் வெளிப்படுத் தியிருந்த திறமைகளை அடிப்படையாகக் கொண்டு ஐ.சி.சி. நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள டெஸ்ட் பந்து வீச்சாளர்கள் தர வரிசையிலேயே ரங்கன ஹேரத் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

இலங்கை சுழல் பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நிறைவுற்ற ஸிம்பாப்வே அணியுட னான டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்டுகளுக்கு மேல் கைப்பற்றி இலங்கை அணியின் வெற்றிக்கு கார ணமாக இருந்தார். இந்தப் போட்டியில் சிறந்த பந்து வீச்சை வெளிப்படுத்திய தன் காரணமாகவே ஹேரத் இரண்டாம் இடத்தைக் கைப்பற்றியுள்ளார்.

இந்த புதிய தர வரிசை, நடைபெற்றிருந்த இங்கி லாந்து மற்றும் தென்னா பிரிக்க அணிகளுக்கு இடையிலான இரண்டு டெஸ்ட் போட்டிகளைக் கொண்ட தொடரை உள்ள டக்கியிருந்தது. முதல் போட்டியில் தோல்வியைத் தழுவியிருந்த தென்னா பிரிக்க அணி, டிரெண்ட் பிரிட்ஜ் ஜில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கி லாந்து அணியை 340 ஓட்டங்களால் வெற்றியீட்டி 1-1 என தொடரை சமப் படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை 81 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி யுள்ள 39 வயதான இடது கை சுழல் பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் மொத்தமாக 384 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

அதேநேரம் அண்மையில் நிறைவுற்ற ஸிம்பாப்வே அணியுடனான டெஸ்ட் போட்டியில் 249 ஓட்டங் களுக்கு 11 விக்கெட்டு களைக் கைப்பற்றியிருந்த நிலையில், டெஸ்ட் தர வரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள் ளார்.

அதேநேரம், இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் ஆண்டர் சன் மற்றும் ஆஸ்திரேலிய அணியின் ஜோஷ் ஹேசல் வுட் ஆகியோர் சமனான புள்ளிகளைப் பெற்று நான் காவது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

அத்துடன், தென்னா பிரிக்க அணியை சேர்ந்த கேஷவ் மகாராஜ் ட்ரெண்ட் பிரிட்ஜ் ஜில் நடை பெற்றிருந்த இங்கிலாந்து அணியுட னான டெஸ்ட் போட்டியில் 6 விக்கெட்டு களை வீழ்த்தியதன் காரணமாக 545 புள்ளி களைப் பெற்று 26 ஆவது இடத்திலிருந்து 12 ஆவது இடத்துக்கு முன் னேறியுள்ளார்.

அந்த வகையில், தென்னா பிரிக்க அணி சார்பாக அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற நான்காவது சுழல் பந்து வீச்சாளராக இவர் பதிவானார். 1992 ஆம் ஆண்டு முதல் தென்னா பிரிக்க அணி டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றி வருகின்ற நிலையில், இதற்கு முன்னதாக அந்த வணி சார்பாக போல் ஹாரிஸ் 705 புள்ளிகள், போல் ஆடம்ஸ் 588 புள்ளிகள் மற்றும் நிக்கி போஜே 545 புள்ளிகளைப் பெற்றமையே கூடிய புள் ளிகளாக பதிவாகியிருந்த மையும் குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் ஸிம்பாப்வே அணித் தலைவர் மற்றும் சுழல் பந்து வீச்சாளர் கிராம் கிரீமர் இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டி யில் 9 விக்கெட்டுகளை கைப்பற்றியதனூடாக தனது கிரிக்கெட் வாழ்க்கையில் முதல் தடவையாக 53 ஆவது இடத்திலிருந்து 20 ஆவது இடத்துக்கு முன்னே றியுள்ளார்.

ட்ரெண்ட் பிரிட்ஜில் 7 விக்கெட்டுகளை வீழ்த்திய ஜேம்ஸ் அண்டர்சன் ஒரு படி முன்னேறி ஐந்தாவது இடத்திலிருந்து 4 ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

அதேவேளை, ஐ.சி.சி. வெளியிடப்பட்டுள்ள டெஸ்ட் துடுப்பாட்ட தர வரிசையில், ஹஷிம் அம்லா இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முறையே 78 மற்றும் 87 ஓட்டங்களைப் பெற்றதன் மூலம், முதல் 10 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ள அதேவேளை 6 இடங்கள் முன்னேறி தர வரிசையில் ஏழாவது இடத் தைக் கைப்பற்றியுள்ளார்.

அதேநேரம் ஸிம்பாப்வே அணியின் துடுப்பாட்ட வீரர்களான கிரைக் எர்வின் மற்றும் சிக்கந்தர் ரசா இலங்கை அணியுடனான டெஸ்ட் போட்டியில் சதம் குவித்ததன் காரணமாக முறையே 40 மற்றும் 48 ஆவது இடங்களைப் பிடித் துள்ளனர்.

ஸிம்பாப்வே அணிக்கு எதிரான போட்டியில் முறையே 45 மற்றும் ஆட் டமிழக்காமல் 80 ஓட்டங் களைப் பெற்று ஆட்ட நாயகன் விருதை வென்ற தோடு இலங்கை அணி 388 என்ற கடின வெற்றி இலக்கை வெற்றிகரமாக கடந்து சாதனை படைக்க காரணமாக இருந்த அசேல குணரத்ன 19 இடங்கள் முன்னேறி முதல் தடவை யாக 79 ஆவது இடத்துக்கு வந்துள்ளார்.

# இலங்கை வந்தது இந்திய அணி: பயிற்சி ஆட்டம் இன்று ஆரம்பம்!




கொழும்பு, ஜூலை 21

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டு விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி நேற்று முன்தினம் இரவு இலங்கையை வந்தடைந்துள்ளது.

இரு அணிகளுக்குமிடை யிலான முதலாவது டெஸ்ட் போட்டி எதிர் வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையிலான போட்டி தொடர்பான அட்ட வணையை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் ஏற்கனவே வெளியிட்டுள் ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனம் வெளியிட்டுள்ள போட்டி அட்டவணை வருமாறு:-

எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் முதலாவது டெஸ்ட் போட்டியும் ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை கொழும்பு எஸ். எஸ்.ஸி மைதானத்தில் 2 ஆவது டெஸ்ட் போட்டியும் ஆகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை கண்டி பல் லேகல மைதானத்தில் 3 ஆவது டெஸ்ட் போட்டியும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, முதலாவது ஒருநாள் சர்வதேச போட்டி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி தம்புள்ளை கிரிக்கெட் மைதானத்திலும் 2 ஆவது ஒருநாள் சர்வ தேச போட்டி ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி கண்டி பல்லேகல மைதானத்திலும் 3 ஆவது ஒருநாள் சர்வதேச ஒருநாள் போட்டி ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி கண்டி பல் லேகல மைதானத்திலும் 4 ஆவது ஒருநாள் சர்வதேச போட்டி ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத் திலும் 5 ஆவது ஒருநாள் சர்வதேச போட்டி செப் ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி கொழும்பு ஆர்.பிரே மதாஸ மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

இரு அணிகளுக்கும் இடையிலான ஒரேயொரு இருபதுக்கு 20 போட்டி செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் இடம்பெற வுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, முதல் டெஸ்ட் போட்டிக்கு முன்பு இந்திய அணி 2 நாள் பயிற்சி ஆட்டத்தில் விளை யாடவுள்ளது. இந்த பயிற்சி ஆட்டம் இன்று ஆரம்ப மாகிறது.

இந்திய அணி கடைசி யாக கடந்த 2015 ஆம் ஆண்டு இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் தொடரில் விளை யாடியது.

3 டெஸ்ட் கொண்ட அந்தத் தொடரை விராட் கோஹ்லி தலைமை யிலான இந்திய அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி இருந்தது என்பது குறிப் பிடத்தக்கது.

## டெங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப், ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுச் சந்தித்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஆஸ்திரேலியாவுக்குப் பயணம்செய்த போது டெங்கு மற்றும் சிறுநீரக நோய் இலங்கையில் பரவுவது தொடர்பாகக் குறிப்பிட்டிருந்தமையை நினைவுகூர்ந்த ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர், டெங்கு நோய் ஒழிப்புக்கு உதவ ஆஸ்திரேலியா அரசு இரண்டு நிகழ்ச்சித் திட்டங்களை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் டெங்கு நோய் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆஸ்திரேலிய அரசு உலக சுகாதார நிறுவனத்துக்கு 4 இலட்சத்து 75 ஆயிரம் ஆஸ்திரேலிய டொலர்களை உடனடியாக வழங்கும் என்றும் ஜூலி பிஷப் குறிப்பிட்டார்.

அத்துடன், இலங்கையிலிருந்து டெங்கு நோயை ஒழித்துக்கட்டுவதற்கு இயற்கையான வொல்பேசியா பக்டீரியாவை அறிமுகப்படுத்துவதற்கான பரிசோதனையைச்செய்வதற்கு ஆஸ்திரேலிய மொனாஸ் பல்கலைக்கழகத்துக்கும் இலங்கை சுகாதார அமைச்சுக்குமிடையில் ஒரு கூட்டு ஆய்வை மேற்கொள்வதற்கு ஆஸ்திரேலியா அரசு ஒரு மில்லியன் டொலர்களை வழங்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தப் பக்டீரியா, டெங்கு வைரஸ் மனிதர்களுக்குப் பரவுவதைத் தடுக்கின்றது எனத் தெரிவித்த அவர், இது கடந்த 6 வருடங்களில் பிரேசில், கொலம்பியா, ஆஸ்திரேலியா, வியட்நாம் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் வெற்றியளித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்தப் பக்டீரியா, நுளம்பால் ஏற்படும் சிகா மற்றும் சிக்கன் குனியா போன்ற நோய்களையும் தடுக்கும் திறன்கொண்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முக்கியமானதொரு சந்தர்ப்பத்தில் இத்தகைய உதவியை வழங்கின்றமைக்காக ஆஸ்திரேலிய பிரதமர் மெல்கம் டேர்ன்புள் தலைமையிலான ஆஸ்திரேலியா அரசுக்கும், ஆஸ்திரேலிய மக்களுக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

ஆள்கடத்தலைத்தடுப்பதற்கு வழங்கிய ஒத்துழைப்புக்காக ஜனாதிபதிக்கும், இலங்கை அரசுக்கும், இலங்கை கடற்படைக்கும் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷப் நன்றி தெரிவித்தார்.

தனது விஜயத்தின்போது கலந்துரையாடப்பட்டதற்கேற்ப சட்டவிரோத போதைப்பொருள் கடத்தலுக்கு எதிராகவும் இரண்டு நாடுகளும் இந்தக் கூட்டுறவைத் தொடரவேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால தெரிவித்தார்.

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்கச் செயன்முறையின் முன்னேற்றங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது.

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் எசல வீரக்கோன், இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதுவர் பிரைஸ் ஹட்சிசன் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (உ)

## சமஷ்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அரசமைப்புச் சாசனப் பேரவையில் இருந்து தாம் உட்பட தமது கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் விலகிக் கொண்டுள்ளமையால் அந்தச் சபைதற்போது செல்லுபடியற்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

புறக்கோட்டையில் அமைந்துள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பதால் நாங்கள் தானாகவே அரசமைப்புச் சட்டவாக்க சபையின் உறுப்பினர்கள் ஆனோம். எனினும் ஆரம்பத்தில் இருந்தே நாங்கள் நடவடிக்கை குழு மற்றும் உபகுழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை.

நாடாளுமன்றத்திற்கு வெளியில் அரசமைப்புச் சட்டவாக்க சபை என்ற பெயரில் அணியை நியமித்து புதிய அரசமைப்புச் சட்டவரைவை கொண்டுவருவதே ரணில் விக்ரமசிங்கவின் தேவையாக இருந்தது.

ஆனால், கூட்டு எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக அது முடியாமல் போனது எனவும் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இதேவேளை, விமல்வீரவன்ஸ இவ்வாறு கூறிய போதிலும், முழு நாடாளுமன்றமும் அரசியலமைப்புச் சட்டவாக்க சபையாக மாற்றப்பட்டு, புதிய அரசமைப்புச் சட்டம் கொண்டு வரப்படும் என பொதுத் தேர்தல் நடைபெற முன்னரே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அறிவித்தலில் ஒப்பமிட்ட தகவலைத்தனது டுவிட்டர்தளத்தில் பதிவேற்றிய ஜனாதிபதி இது இலங்கையில் நிலையான சமாதானத்தை நோக்கிய முன்னேற்றத்தில் மற்றொரு அடி என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த வர்த்தமானி அறிவித்தலின் படி காணாமற்போனோர் அலுவலகம் ஜனாதிபதியின் கீழ் உள்ள நல்லிணக்கம் சம்பந்தமான அமைச்சுக்கு உட்பட்டதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தாம் இன்று மாலையில் கொழும்பு செல்லவேண்டியிருப்பதால் தமது அமைச்சின் கீழான விடயங்களை முதலில் நேரத்துடன் ஆராய்வுக்கு எடுக்குமாறு முதல்வர் விக்னேஸ்வரன் கோரியுள்ளார் எனத் தெரிகின்றது.

அதனால் முதலில் முதலமைச்சரின் கீழ் உள்ள அமைச்சுகள் பற்றிய விடயங்கள் இன்று விவாதத்துக்கு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## ஞாயிறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மான பீடத்தில் அமைந்துள்ள சிவலிங்கத்திற்கு விசேட வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் அன்று அதிகாலை 5.00 மணிமுதல் இந்த வழிபாடு இடம்பெறும்.

தந்தையை இழந்தவர்கள் அன்றைய தினம் கண்டகி தீர்த்தத்தில் புனித நீரை எடுத்துவந்து சிவலிங்கப் பெருமானுக்கு தங்கள் கைகளால் அர்ச்சித்து பிதிர் வழிபாடு ஆற்ற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாத்கோவிந்த் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி நடந்த தேர்தலில் இவர் 66.65 வீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

புதிய குடியரசுத் தலைவரைத் தெரிவுசெய்வதற்காக இந்தியாவின் 776 நாடாளுமன்ற மற்றும் 4120 சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்த வாக்குகள் நேற்று இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் எண்ணப்பட்டன.

இதன்படி, பா.ஜ.க. வேட்பாளரான ராம்நாத் கோவிந்த் 7 லட்சத்து 2 ஆயிரத்து 644 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார் என அறிவிக்கப்பட்டது.

இவரை எதிர்த்துப் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற சபாநாயகருமான மீரா குமார் அம்மையார் 3 லட்சத்து 67 ஆயிரத்து 314 வாக்குகளைப் பெற்றார். இதுமொத்தவாக்குகளில், 34.35 சதவீதமாகும்.

புதிய குடியரசுத்தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட ராம்நாத் கோவிந்துக்கு இந்திய மற்றும் வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

(விரிவான செய்தி 14 ஆம் பக்கத்தில்)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இரா.சம்பந்தனும் வடக்கு மாகாண முதல்வர் சி.வீ.விக்னேஸ்வரனும் இந்த வார இறுதியில் சந்திப்பார்கள் என்று எதிர்பார்க்கப் பட்டபோதிலும், நேற்றிரவு வரை அந்தச் சந்திப்புக்கான ஒழுங்குகள் இறுதி செய்யப்படவில்லை.

இருவருக்கும் பொதுவான நண்பரான ஜனாதிபதி சட்டத்தரணி கனக. ஈஸ்வரனின் பங்கு பற்றுதலுடன் இச்சந்திப்பு நடைபெறுகின்றமையை சம்பந்தர் விரும்புகின்றார் எனக் கூறப்படுகின்றது.

சட்டத்தரணி கனக. ஈஸ்வரனின் பங்குபற்றுதலுடன் சந்திப்புக்கான ஒரு திகதியை ஒழுங்கு செய்வதில் கால தாமதம் ஏற்படுவதாகத் தெரிகின்றது.

இன்று பிற்பகலில் வட மாகாண சபையின் விசேட அமர்வை முடித்துக் கொண்டு முதல்வர் விக்னேஸ்வரன் விமானத்தில் கொழும்பு செல்கின்றார்.

நாளை அவர் இலங்கை சட்டக் கல்லூரியின் தமிழ் மன்றம் நடத்தும் கலை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

நாளைமறுதினம் ஆடிஅமாவாசையாகும். இரண்டு தலைவர்களுமே – சம்பந்தன், விக்னேஸ்வரன் இருவருமே – அது தொடர்பான கிரியைகளில் அதிக ஈடுபாடு உள்ளவர்கள் என்பதால், அன்றைய தினம் சந்திப்பு நடைபெறாது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. அதனால் அடுத்த நாள் 23 ஆம் திகதி இந்தச் சந்திப்பு நடைபெறலாம் எனவும் அவ்வட்டாரங்கள் கூறின.

இது குறித்து நேற்றிரவு எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனோடு கேட்டபோது "இந்த நேரம் வரை அந்தச் சந்திப்புக்கான ஒழுங்குகள் செய்யப்படவில்லை." – என்று அவர் சொன்னார். (உ)

## ஊர்காவற்றுறையில் பண்பாட்டுப் பெருவிழா

ஊர்காவற்றுறை, ஜுலை 21

வடமாகாணபண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், ஊர்காவற்றுறை பிரதேச கலாசாரபேரவையும் ஊர்காவற்றுறை பிரதேசசெயலகமும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா இன்று காலை 9.30 மணிக்கு புளியங்கூடல் மகாமாரி இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திருமதிஸ்.வனஜாமற்றும் ஊர்காவற்றுறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சரித ஏ.பி. ஜெயசுந்தர ஆகியோர் கலந்து கொள்வர். கௌரவ விருந்தினர்களாக கணினிப் பொறியிலாளர் எஸ்.சிவாஸ்கரன், மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி மாலினி கிருஸ்ணா னந்தன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இங்கு, 2017 ஆம் ஆண்டிற்கான கலை விழுது விருது 11 பேருக்கும், கலை முகிழ் விருது 6 பேருக்கும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வத்தை இறுதி செய்தது.

அந்த நகல் வடிவத்தில் ஏதேனும் மாற்றம், திருத்தம், சேர்ப்பு இடம்பெறவேண்டும் என ஏதேனும் கட்சியோ அல்லது அவற்றின் நடவடிக்கைக்குழுப் பிரதிநிதிகளோ கருதினால், அந்த விவரத்தோடு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் நடவடிக்கைக் குழுற்கு சமுகம் தர வேண்டும் என நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது.

நடவடிக்கைக் குழுவின் நேற்றைய கூட்டத்தில் கூட்டு எதிரணியின் பிரதிநிதிகள் பங்கு பற்றவில்லை. எனினும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் கூட்டத்துக்குத் தாம் சமுகம் தருவார்கள் என அவர்களால் தெரிவிக்கப்பட்டது என்று நேற்றைய கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

## நாடாளுமன்றில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர் குற்றம்சாட்டினார்.

இந்த அரசாங்கத்தின் நிதி தொடர்பான தீர்மானங்கள் அர்ஜுன மகேந்திரனினால் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த அரசாங்கத்தின் சுகாதார நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானம் நெவில் பெர்னோண்டாவினால் எடுக்கப்படுகின்றது. இந்நாட்டின் நீதி நடவடிக்கைகள் குறித்து தீர்மானம் எடுப்பது ஐ.நா.வின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் செயலாளர் ஹசேன் இளவரசர். இந்த நாட்டின் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்களை முன்னெடுப்பவர்கள் புலம்பெயர் புலி ஆதரவாளர்கள்.

எனவே அரசாங்கத்துடன் ஒட்டியிருக்கும் சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் வெளியேறுவதற்கு இன்னும் காலம் எடுக்கக் கூடாது எனவும் டலஸ் அழகப்பெரும எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சு.க. உறுப்பினர்கள் டிசெம்பர் வரை அரசுடன் இருக்க வேண்டியதில்லை. செப்டம்பர் 2 உடன் வெளியே வரலாம். இது ஐ.தே.கவின் அரசாங்கம். இந்த அரசாங்கத்துக்குள் சு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து இருந்தால், யானை விழுங்கிய விளாம்பழம் போன்றுதான் இருப்பார்கள். – எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அளித்தபோது நீதிமன்ற வளாகத்திலும் நீதிமன்றின் உள்ளேயும் முதன் முறையாக விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு நீதிமன்றின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

வித்தியா படுகொலையின் முக்கிய சூத்திரதாரி எனக் கருதப்படும் சுவிஸ்குமார் எனப்படும் மகாலிங்கம் சசிகுமாரிடம் விசாரணைகளை முன்னெடுத்தவர் என்ற அடிப்படையில் அவர் நேற்று சாட்சியமளித்தார்.

அவர் சாட்சியமளிக்கையில் – 2015 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் திகதி யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்திற்கு வருகை தந்தேன். வித்தியாவின் தாயார் மற்றும் பல தரப்பினரிடம் வாக்குமூலம் பெற்றேன். சட்டத்தரணியும், கொழும்பு சட்டத்துறை விரிவுரையாளர் தமிழ்மாறனிடமும் அவரது மகனிடமும் வாக்குமூலத்தைப் பெற்றுக்கொண்டேன்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளைப் பல்வேறு கோணத்தில் மேற்கொண்டிருக்கின்றேன். வித்தியாவின் சடலம் இருந்த நிலைமை மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

சடலத்தைப் பார்க்கும் எந்த வொரு மனிதனுக்கும் அது கவலையை ஏற்படுத்தும் வகையில் இருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் விசாரணையை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கூட்டுக்கொள்ளைச் சம்பவ பொறுப்பதிகாரி மூலம் அனுமதி கோரி, பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஊடாகப் பாதுகாப்பு அமைச்சரின் கட்டளை பெற்று, பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதியின் கட்டளையின் பிரகாரம் அவர்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யப்பட்டனர். – எனச்சாட்சியம் அளித்தார்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தில் ஏன் விசாரணைகளை மேற்கொண்டீர்கள் எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர்,

சந்தேக நபர்கள் இன, மத முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சிக்கிறார் என மிகவும் உறுதியான சந்தேகம் இருந்தது. அதனால், பங்கரவாத தடைச்சட்டத்தில் விசாரணை மேற்கொள்வதற்கு உத்தரவு பெறப்பட்டது என சாட்சியமளித்தார் அவர்.

அதன்போது, ஒரு கட்டத்தில், சாட்சி நீதிமன்றைப் பிழையாக வழிநடத்துகிறார் என எதிரிகள் சார்பில் குறுக்கு விசாரணை செய்த சட்டத்தரணி குற்றஞ்சாட்டினார். அதற்கு பதிலளித்த பியகமகே சிசிர சிசேரா, "கடந்த 30 வருடங்கள் சேவையில் இருக்கின்றேன். பல நீதிமன்றங்களில் சாட்சியமளித்துள்ளேன். இருந்தும் எந்த வித குற்றச்சாட்டுக்கும் ஆளாகவில்லை" – என்றார்.

தொடர்ந்து வழக்கு விசாரணை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ம)

# ரயில் கடவைக் காப்பாளர்களின் மறுக்கப்படும் தொழில் உரிமை

## ரயில் கடவைக் காப்பாளர் ஒன்றியத் தலைவர் விசனம்




வவுனியா, ஜூலை 21

ரயில்கடவைக் காப்பாளர்க ளின் தொழில் உரிமைகள் மறுக் கப்படுகின்றன என்று வடக்கு, கிழக்கு ரயில் கடவைக்காப்பாளர் ஒன்றியத் தலைவர் ரொகான் ராஜ்குமார் விசனம் தெரிவித் துள்ளார்.

வவுனியாவில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

கடந்த மூன்று வருடங்களாக நாளொன்றுக்கு 250 ரூபா சம்பளத்துக்கு நாம் பணியாற்றி வருகின்றோம். இதன் காரணமாக ரயில் கடவை பாதுகாப்பு ஊழியர் களின் தொழில் உரிமைகள், மனித உரிமைகள் மறுக்கப்படு கின்றன. ரயில் கடவை பாது காப்பு ஊழியர்கள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெய சுந்தரவின் வேண்டுகோளுக்கு அமைவாக ரயில்வே திணைக்களகத்துக் குள் உள்வாங்கப்பட உள்ளனர்.

அத்துடன் வடக்கு, கிழக் கில் போரால் பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் புறக்கணிக் கப்படாமல் ரயில் கடவைக் காப்பாளர்களாகப் பணியாற்றிய அனைவரும் ரயில்வே திணைக் களத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும். அவர்கள் புறக் கணிக்கப்பட்டால் எமது ஊழியர் களின் வாழ்வாதாரம் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும். அத்துடன், அரசால் வழங்கப்படும் எந்தவிதமான உதவித் திட்டங் களும் ரயில்கடவை ஊழியர்க ளுக்கு கிடைப்பதில்லை. அதே போன்று நாடளாவிய ரீதியில் சமூர்த்தி பயனாளிகள் மீளாய்வு செய்யப்பட்டுவரும் நிலையில் எமது ரயில் கடவை பாதுகாப்பு ஊழியர்கள் திட்டமிட்டுப் புறக் கணிக்கப்படுகிறார்கள்.

நாங்கள் எங்களது உயிர்களை பணயம் வைத்தே பணியாற்றி வருகிறோம். ஆகவே, அரச அதிகாரிகள் ரயில் கடவை பாது காப்பு ஊழியர்களின் விடயத்தில் கரிசனை கொள்ள வேண் டும். -என்றார். (எ-100)

## ரயில் பாதை விபத்துகளை குறைக்க நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 21

ரயில் பாதைகளில் ஏற்படு கின்ற விபத்துக்களைக் குறைப்பதற்காக விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு தேசிய வீதிப் பாதுகாப்புச் சபை தீர் மானித்துள்ளது.

இதேவேளை, ரயில் பாதை களில் ஏற்படும் விபத்துக் களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டு அதிக ரித்துள்ளதாக அதன் தலை வர் சிசிர கோதாகொட கூறி னார்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை தொடர்பில் ரயில்வே அதிகாரி களுடன் பேச்சு நடத்தி அதனை நடை முறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## செட்டிகுளம் பிரதேச மக்களுக்குக் கோழிக்குஞ்சுகள் வழங்கி வைப்பு

வட மாகாணசபை உறுப் பினர் ஜீ.ரி. லிங்கநாதனால் 2017 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக் கப்பட்ட நிதியில் இருந்து செட்டிகுளம் பிரதேச மக்களுக்கு வாழ்வாதார உதவியாக கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

செட்டிகுளம் கால்நடை அபி விருத்தித்திணைக்கள அலுவலகத் தில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் புளொட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினரும் செட்டிகுளம் பிரதே சத்தின் இணைப்பாளருமான வே.குகதாசன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும், வவுனியா தெற்குப் பிரதேச இணைப்பாள ருமான த. யோகராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)



## யாழ்.நுழைவாயில் லயன்ஸ் கழகத்தால் மூக்குக் கண்ணாடி வழங்கல்

நாவற்குழி லயன்ஸ் கழ கத்தால் வறுமைக்குட் பட்ட 100 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட வுள்ளன.

நாளை மறுதினம் ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவற்குழி ரயில் நிலையத்துக்கு அண்மை யில் அமைந்துள்ள நுழை வாயில் லயன்ஸ் கழக மண் டபத்தில் வைத்தே கண் ணாடிகள் வழங்கப்பட உள்ளன.

கண் பார்வை பரிசோ திக்கப்பட்டு அதற்கான கடிதங்கள் வைத்திருப்போர் அவற்றை அன்றைய தினம் சமர்ப்பித்து மூக்குக் கண் ணாடிகளை உடன் பெற் றுக்கொள்ள முடியும். இல்லாதவர்கள் லயன்ஸ் கழகத்துக்கு அன்றைய தினம் வரும் போது அவர் களுக்கான கண் பரிசோத னைகள் இடம் பெற்று கண்ணாடிகள் வழங்கப் பட உள்ளன.

கண்ணாடி தேவைப்படு வோர் நாவற்குழி ஏ9 வீதி யில் உள்ள நுழைவாயில் லயன்ஸ்கழகத்துடன் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழ மைக்கு முன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட் டுள்ளனர். (இ)

## நாளைமின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக் காக நாளை சனிக்கிழமை -

காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ் பிரதேசத்தில்** கரந்தனை, இயக்கச்சி, மல்வில், முகாவில், கோவில்வயல், இயக்கச்சி இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்-

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கிளிநொச்சி நகரம், திருநகர், கணேசபுரம், கரடிப்போக்கு, பல்லவராயன்கட்டு, கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு, குமுழமுனை, முழங்காவில், நாச் சிக்குடா, வெள்ளாங்குளம், ஓவசியர் கடைச்சந்தி, தரணிகுடியிருப்பு, நீவில், முட்கொம்பன், நல்லூர், தம்பிராய், பூநகரி 4ஆம் கட்டை, பள்ளிக்குடா, கௌதாரி முனை, பரந்தன் நகரம், உமையாள்புரம், தட்டுவன்கோட்டை, பரந்தன் இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், சுகந்தன் அரிசி ஆலை, ஆனையிறவு உப்பு உற்பத்தி நிலையம், 12ஆவது VIR இயக்கச்சி, 5ஏ அரசபுரம், முழங்காவில் கடற் படை முகாம், முழங்காவில் ஐஸ் தொழிற்சாலை, வெள்ளாங்குளம் 651ஆம் பிரிகேட் இராணுவ முகாம், மக்கள் வங்கி, கிளிநொச்சி மாவட்டசெயலகம் (கச்சேரி),

பிருந்தா உற்பத்தி நிலையம், சிவனருட்செல்வன் அரிசி ஆலை, கிளிநொச்சி லங்கா சதோச, கார்கில்ஸ் பி.எல்.சி, கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்களம், கிளிநொச்சி இலங்கை வங்கி ஆகிய இடங்களிலும்-

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம், உக்குளாங்குளம் ஆகிய இடங்களிலும்-

**மன்னார் பிரதேசத்தில்** பறயனாலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை C.E.C.B, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக் களம், அடம்பன் நீர்ப்பாசன சபை, கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், C.T.B மன்னார், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடா்பு நிலையம், ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, ரைமெக்ஸ் கார்மெனட், விசேட அதிரடிப்படை முகாம், எருக்கலம்பிட்டி பம் கவுஸ், பேசாலை Palmayrah House வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, மீனபிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ்தொழிற்சாலை, தலைமன்னார் வைத்திய சாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத்துறைமுகம் ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## தங்க பிஸ்கெட் கடத்தல் இந்தியர் இருவர் கைது!

கொழும்பு, ஜூலை 21

தங்க பிஸ்கெட்டுக ளைக் கடத்திச் செல்ல முயன்ற இந்தியப் பிர ஜைகள் இருவர் கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுங்கப் பிரிவு அதிகாரி களால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணியள வில் UL139 என்ற விமானத்தில் தங்க பிஸ் கட்டுகளைக் கடத்திச் செல்ல முற்பட்ட போதே அந்த இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கடத்திச் செல்ல முயன்ற தங்க பிஸ்கெட்டுகள் 199.6 கிராம் மற்றும் 295.95 கிராம் நிறையுடையவை என்று என்று சுங்கத் திணைக்கள ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்தார்.

அவற்றின் பெறுமதி 2 கோடி ரூபாவுக்கும் அதிகம் என்று அவர் மேலும் கூறினார்.

39 வயது மற்றும் 46 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர். (எ)

## 'சைட்டம்' குறித்து போலித் தீர்வு முன்வைத்தால் கடும் நடவடிக்கை

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 21

'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் போலியான தீர்வுத் திட்டங்கள் முன் வைத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச் சரிக்கை விடுத் துள்ளது.

சுகாதார அமைச்சரின் நடவடிக்கைகளைக் கட் டுப்படுத்துவதற்கு பிரத மர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலா ளர் வைத்தியர்ஹரிதஅலுத்கே தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

'சைட்டம்' தனியார் மருத்துவக் கல்லூரி தொடர்பில் அரசு தெளி வான சரியான தீர்மானம் ஒன்றை எடுக்ககாலம் தாழ்த்தக் கூடாது.

அதைவிடுத்து அரசு போலியான தீர்மானங் களை எடுக்க முயற்சித் தால் கடுமையான நட வடிக்கைகளை எடுக்க நேரிடும்.-என்றார். (எ)

## வாராந்த ஆன்மீக சொற்பொழிவு

தொண்டமானாறு சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப்பேரவை நடத்தி வரும் வாராந்த ஆன்மீக நிகழ் வில் இன்று பிற்பகல் 10.30 மணிக்கு கந்தபுராண சொற் பொழிவு இடம்பெறும். வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரியின் மூத்த விரிவுரையாளர் அ.குமாரவேல் அந்த விரிவு ரையை நிகழ்த்துவார்.





இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கை வந்திருக்கும் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஜீலி பிஷப் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது அமைச்சர் சாகல ரட்னாயக்க, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir | சசிகா லேணர்ஸ்

A/L எடுக்கும் மாணவர்களுக்கு அரிய சந்தர்ப்பம்
இந்தச் சிட்டையைப் பூர்த்தி செய்து வரும்
மாணவர்களுக்கு சாரதியப் பயிற்சிக்கு விசேட
கட்டணக் கழிவு வழங்கப்படும்.

பெயர் ..................................................

முகவரி ..................................................

..................................................

தொ.பே.இல..................................................

## கண்ணிவெடியகற்றிய காணியில் நிலக்கண்ணிகள் கண்டுபிடிப்பு!

### புதுக்குடியிருப்புப் பகுதியில் சம்பவம்



முல்லைத்தீவு, ஜுலை 21

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு – ஒட்டுசுட்டான் வீதியில் சுனாமி நினைவாலயத்துக்கு முன்பாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் நீர்த்தாங்கி அமைப்பதற்காக துப்புரவு செய்யப்பட்ட காணியில் நேற்று நிலக்கண்ணிவெடிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் காணிகள் அடங்கிய பகுதி ஏற்கனவே கண்ணிவெடியகற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கண்ணிவெடியகற்றப்பட்டவை என அறிவிக்கப்பட்டபோதும், இந்தப் பகுதியில் நேற்று கண்ணிவெடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் வெடிபொருள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

எனவே இந்தப் பகுதியை அண்மித்த பகுதிகளை மீண்டும் கண்ணிவெடியகற்றும் செயற்பாட்டுக்கு உட்படுத்துமாறு மக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் மக்கள் நடமாடித்திரிந்தும் தெய்வாதீனமாக இதுவரை எந்த விபரீதமும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### வித்தியா கொலை வழக்கு விசாரணைக்கு

## ஊர்காவற்றுறை நீதிவானை மன்றில் ஆஜராக உத்தரவு

(எஸ்.நிதர்ஷன்)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கை விசாரிக்கும் 'ட்ரயல் அட்பார்' தீர்ப்பாயம், ஊர்காவற்றுறை நீதிவான் எம்.என்.ரியால் மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸ் பொறுப்பதிகாரி நிஷாந்த சில்வா ஆகியோரை எதிர்வரும் திங்கட்கிழமை மன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது.

வித்தியாவின் படுகொலை வழக்கு விசாரணை யாழ். மேல் நீதிமன்றில் 'ட்ரயல் அட்பார்' தீர்ப்பாயத்தில் இடம்பெற்று வருகின்றது.

நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பியகமகே சிசிர சிசேரா சாட்சியமளித்தார்.

அவரது நீண்ட சாட்சியம் காரணமாக மற்றைய சாட்சியான ஊர்காவற்றுறை பொலிஸ் பொறுப்பதிகாரி நிஷாந்த சில்வா நேற்று சாட்சியம் அளிக்க முடியவில்லை. இந்நிலையில் வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. (ம)

## இழுவை படகுகளுக்கு 'டப்' கணினி



மீன்பிடித்தல் தொடர்பான தகவல்களைப் பதிவு செய்வதற்கென இழுவைப் படகுகளுக்கான 'டப்' கணினிகளைப் பெற்றுக் கொடுக்க சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இழுவைப் படகுகளுக்காக இரண்டாயிரத்து 238 'டப்' கணினிகள் பெற்றுக் கொடுக்கப்படும். அதற்குப் பயன்படுத்தப்படும் மென்பொருளை கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவு தயாரித்துள்ளது. இந்த மென்பொருள் பயன்பாடு மற்றும் 'டப்' கணினிகளை பயன்படுத்துவது குறித்து மீனவ சமூகத்திற்குப் பயிற்சி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வதேச கடற்பகுதியில் மீன் வளத்தை பெற்றுக் கொள்ளும் போது சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைய ஒவ்வொரு இழுவைப் படகு ஊடாகவும் பிடிக்கப்படும் மீன்கள் தொடர்பான தரவுகளைக் கணினியில் பதிவு செய்ய வேண்டும். அதே நேரம் அந்த சகல தரவுகளையும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கு பெற்றுக் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

கடல் வளம் தொடர்பான சர்வதேச சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படத் தவறியமை காரணமாகவே ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீது மீன் ஏற்றுமதித் தடையை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐ.நாவின் அரசியல் விவகாரங்களுக்கான செயலர் ஜெப்ரி பெல்ட்மன் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அலரி மாளிகையின் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. இந்தச் சந்திப்பின் போது, இலங்கைக்கான ஐ.நாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி உனா மக்கோலியும், இலங்கையின் சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்னாயக்கவும் உடன் இருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்கா சென்றிருந்த போது கடந்த ஜுன் 5ஆம் திகதி ஐ.நாவின் அரசியல் விவகாரங் களுக்கான செயலர் ஜெப்ரி பெல்ட்மனைச் சந்தித்து, அரசமைப்பு மறுசீரமைப்பு, நல்லிணக்கம் போன்றவற்றில் தாக்கம் செலுத்தும் காரணிகள் தொடர்பாகப் பேச்சு நடத்தியிருந்தார்.

## வவுனியாவில் பாடசாலை ஓலைக் கொட்டகைக்குள் வந்து செல்லும் வெள்ளை நாகம்: பீதியுடன் கற்கும் மாணவர்கள்



வவுனியா, இறம்பைக்குளம் நடராஜானந்தா வித்தியாலய ஓலைக் கொட்டகையின் கூரையில் கடந்த சில நாள்களாக வெள்ளைநாகம் ஒன்று வந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் அச்சத்துடனனேயே கல்வி கற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியா, ஓமந்தை சோத னைச் சாவடி அமைந்திருந்த இடத்தில் உள்ள நடராஜானந்தா வித்தியாலயம் போதிய அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் ஓர் ஓலைக் கொட்டகையுடன் இயங்கி வருகின்றது. இங்கு தரம் – 5 வரையான மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

இந்த நிலையில் இந்தப் பாடசாலையின் ஓலைக் கொட்டகையின் கூரையில் வெள்ளை நிற நாக பாம்பு ஒன்று அடிக்கடி வந்து செல்வதாகவும், இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் அச்சத்துடனேயே கற்றல் – கற்பித்தல் நடவடிக்கையில் ஈடு படவேண்டியவர்களாக இருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை, இப்பாடசா லைக்கு கட்டடம் ஒன்று அமைப்பதற்காக கடந்த சனிக்கிழமை அடிக்கல் நாட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடக்கதக்கது. (உ–100)







ஸ்ரீமத் சோமஸ்கந்தவேள் சுவாமிகளின் 11 ஆவது குருபூசைத் தினத்தை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை கந்தர்மடம் குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மடத்தில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.